

உ
சிவமயம்

விசேஷ
விளம்பரத்திற்கு!

இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

Registered as a Newspaper in Ceylon.
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும், போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே.

விசேஷ
விளம்பரத்திற்கு!

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ம் திகதி ஆரம்பமானது.]

[புத்தகம் ௫௧]   யாழ்ப்பாணம்:— விக்கிரம ௵ சித்திரை ௴ ௧௨ ௳ (1941 ஏப்ரல் 24 வியாழக்கிழமை)

[இலக்கம் ௪]

நேருவுக்கு ஹிட்லர் வேண்டுகோள்

ஜெர்மன் சர்வாதிகாரிக்குத் துடுக்கான மறுமொழி அரசாங்க விருந்தினராக இருக்க மறுப்பு

ஜெர்மன் பிரயாணத்தில் நிகழ்ந்த சம்பவம் நேரிற் கண்டவர் கூறும் விவரம்

பண்டிதர் ஜவஹர்லால் நேரு 1938ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ஜேர்மனியிற் சுற்றுப்பிரயாணம் செய்யும்போது மூனிச் நகரத்தில் டக்ரர் நாராயணதத்த வித்தியாலங்கார் என்னும் இந்திய மாணவரின் விடுதியில் தங்கியிருந்தார். அவரைக் கேள்வியுற்ற ஜேர்மன் சர்வாதிகாரி ஹிட்லர், பண்டிதரைக் காணச் செய்த பிரயத்தனம் நிராகரிக்கப் பட்டதை, டிெ டக்டர் வித்தியாலங்கார் புதுடெல்கியிற் பிரசுரமாகும் "ஹேரல்ட் வீக்லி" என்னும் பத்திரிகையில் விவரிக்கிறார். அவருடைய கட்டுரையின் சாரம் வருமாறு:-

"... ... ... அவருடைய ஜோலிகள் எல்லாம் முடிந்தபின், மூனிச் நகரத்தில் நாம் அவருக்காகச் செய்திருக்கும் ஏற்பாடுகளைப் பற்றிப் பிரஸ்தாபித்தேன். அவ்வேற்பாடுகளில் ஒன்று ஓர் விருந்துக் கச்சேரி. இவ்விருந்தில், மூனிச் நகரத்தில் உள்ள பிரபல ஜெர்மன் பிரபுக்கள் பங்குபற்றுவார்கள் என்றும், அவர்கள் நேருவுடன் சம்பாஷிக்க அவாவுகின்றனர் என்பதையும் அவருக்குத் தெரிவித்தேன். அதற்குப் பண்டிதர் இணங்கவில்லை. "நான் என் சொந்த விஷயமாக இங்கே வந்தேனே ஒழிய வேறொன்றுக்குமல்ல: எனவே நான் ஒரு ஜெர்மனியருடனாவது எவ் விஷயத்தைப் பற்றியேனும் சம்பாஷிக்க விரும்பவில்லை" என்று பட்டவர்த்தனமாகத் தெரிவித்து விட்டார்.

"இப்படியாக நாங்கள் சம்பாஷித்துக் கொண்டிருக்கையில், பண்டிதரின் பிரயாணச் சாமான்கள் இன்னும் வந்து சேரவில்லை என்பது ஞாபகத்திற்கு வந்தது. புகையிரத ஸ்தானத் தலைவரை இவ் விஷயமாக உடனே டெலிபோன் மூலம் விசாரித்தேன். ஜெர்மனிக்கும் பிரான்சுக்கும் இடையில் உள்ள எல்லைப் புறத்தில் அச்சாமான்கள் இருக்கின்றன வென்றும், அவற்றை ரேகுப் பகுதியார் சோதனை செய்து பார்த்த பின்னரேயே அனுப்ப முடியும் என்றும் புகையிரத ஸ்தானத் தலைவர் தெரிவித்தார். இரண்டரை மணித்தியாலம் சென்றதும், சாமான்கள் வரவில்லை. இப்படியாகப் பிரயாணிகளின் சாமான்களை வைத்திருக்கலாமா என்பதைப் பற்றி ஜெர்மன் அதிகாரிகளுக்கு விரோதமாகப் பிராது தொடரவேண்டு மெனப் பண்டிதர் யோசித்துக்கொண்டிருக்கையில், அதிர்ஷ்டவசமாக அச்சாமான்கள் அப்படியே பவுத்திரமாக வந்து சேர்ந்தன.

டெலிபோனில்

"அடுத்தநாட் காலைப் போசனம் அருந்திய பின், ஜெர்மனியில் உள்ள இந்திய மாணவர்களைப் பற்றிப் பண்டிதர் நேரு விசாரித்துக்கொண்டிருக்கையில், டெலிபோன் கணகண வென்று அடித்தது. ஓர் அந்நியநாட்டில், அதுவும் அதிகாலையில், தன்னைக் கூப்பிடுபவர் யாராயிருக்கலாம் என்று பண்டிதர் அதிசயப்பட்டார். ஹோட்டல் மானேஜரே டெலிபோனில் கூப்பிட்டார். அவருடைய அரை குறையான ஆங்கிலம் பண்டிதர்க்குப் புரியவில்லை. எனவே என்னையே அந்த மனேஜருடன் பேசும்படி பணித்தார். ஜெர்மனியின் பிரசார மந்திரியான டக்ரர் கோபல்ஸ் பண்டிதர் ஜவஹர்லால் நேருவுடன் சம்பாஷிக்க அவாவுற்று, ஹோட்டலுக்கு வந்திருப்பதாகவும், அப்படிச் சம்பாஷிப்பதற்குப் பண்டிதரின் சம்மதம் எப்படியோ என்றும் ஹோட்டல் மானேஜர் கேட்டார். இதை நான் பண்டிதர்க்குத் தெரியப்படுத்தினேன். "இவை எல்லாம் எதற்கு? இருந்தாலும் பரவாயில்லை. கோபல்ஸைக் கூப்பிடு" என்று பண்டிதர் கூறினர். நான் அதை ஹோட்டல் மானேஜருக்குத் தெரியப் படுத்தினேன்.

"இரண்டு நிமிஷத்தின் பின்னர் டக்ரர் கோபல்ஸ் வந்து, அறைக்கு வெளியே நின்று, 'உள்ளே வர அநுமதி கேட்கும் தம் 'கார்டை' அனுப்பினர். பண்டிதரின் உத்தரவு கிடைத்ததும், டக்ரர் கோபல்ஸ் உள்ளே வந்து, நாஜியர் முறைப்படி தம் கையை உயர்த்தி "ஹெயில் ஹிட்லர்" என்று சொல்லி வணக்கம் செய்தார். பண்டிதர் இந்திய முறைப்படி கை கூப்பி வணக்கம் செய்தார். பண்டிதரின் மகள் இந்திராதேவியை நான் கோபல்சுக்கு அறிமுகப் படுத்தினேன்.

கோபல்ஸ் நின்றார். அவரை நான் இருக்கும்படி கூறியும் இருக்கவில்லை. 'இல்லை, ஆசனத்தமருங்கள்' என்று நேரு கூறிய பின்னர்தான் அவர் சோபாவின் ஓர் பக்கத்தில் உட்கார்ந்தார். சில நேரச் சம்பாஷணைக்குப் பின், கோபல்ஸ், முத்திரையிடப் பட்ட ஓர் கடிதத்தை நேருவிடம் கொடுத்தார். "இதில் என்ன இருக்கிறது" என்று சொல்லிவிட்டுப் பண்டிதர் அதை உடைத்துப் பார்த்தார். அதற்குள் ஹிட்லரின் கையால் எழுதிய கடிதம் ஒன்று இருந்தது.

ஹிட்லரின் கடிதம்

"பண்டிதர் நேருவைத் தான் காண்பதற்கு அவாப்படுவதாக ஹிட்லர் அக் கடிதத்தில் தெரிவித்திருந்தார். "நான் என் சொந்த அலுவல் நிமித்தமே இங்கு வந்துள்ளேன். எனவே ஹிட்லரைக்காண எனக்கு அவசியமில்லை" என்று நேருஜி கூறியதும் கோபல்ஸ் திடுக்கிட்டுப் போனார். உலகத்தை ஆட்டி வைக்கும் ஹிட்லருக்கு கேவலம் அடிமை நாட்டிற் பிறந்துள்ள ஒருவர் இத்தகைய விடை கொடுப்பார் என்று கோபல்ஸ் கனவிலும் எண்ணவில்லை. கோபல்ஸ் சில நிமிஷ நேரம் யோசித்தார். அவருக்குத் தைரியம் பிறந்தது. "எங்கள் நாட்டின் விருந்தாளியாக நீங்கள் இருந்தால், எமது அரசாங்கம் தங்களுக்குத் தேவையான சௌகரியங்களை அனைத்தும் செய்யும். தங்களை எங்கள் ஜெர்மன் இராச்சிய விருந்தாளியாக வைத்திருக்க மிகவும் அவாவுகின்றோம். அப்படியெனில், நாமும் எமது தலைவர் ஹெர் ஹிட்லரும் பரம சந்தோஷமடைவோம்" என்று வேண்டினர் டக்ரர் கோபல்ஸ்.

பண்டிதர் என்னை நோக்கி, நான் இங்கே எனது இந்திய நண்பர்களுடன் சுகமாகக் காலங் கழிக்கிறேன். எனவே, ஜெர்மன் அரசினர்க்கோ ஹெர் ஹிட்லருக்கோ நான் சிரமம் கொடுக்க விரும்பவில்லை என்பதை டக்ரர் கோபல்சுக்குச் சொல்லும்" என்று என்னை நோக்கி நேரு கூறினர். பாவம்! கோயபல்ஸ் ஏமாற்றத்துடன் திரும்பினர்."

'நான் அடைந்த ஏமாற்றம்'

கண்டதெல்லாம் கனவு! காண்பதெல்லாம் வறுமை!

ஆசிய நாட்டில் ஆங்கிலராட்சி அலங்கோலமடையக் காரணமென்ன?

கவிதாகூரின் குற்றப் பத்திரிகை

[இற்றைக்குச் சின்னாட்களுக்கு முன், சாந்திநிகேதனத்தில், கவியரசர் ரவீந்திரநாத தாகூரின் 80-வது ஜெநந தினம் கொண்டாடப் பட்டபோது, பாரதநாட்டில் ஆங்கிலராட்சி சம்பந்தமாகக் கவியரசர் செய்த பிரசாரணத்தின் சாரம்:-]

இந்த வருஷத்துடன் எனது வாழ்க்கையில் 80 ஆண்டுகள் பூர்த்தியாகி விட்டன. நான் அடைந்துள்ள இந்த வயோதிப நிலைமையில், கடந்து போன காலத்தைச் சீர்தூக்கிப் பார்க்கும் சித்த சமாதானத்தை ஆண்டவன் அருளியிருக்கின்றான். என் வாழ்க்கை ஆரம்பமான நாள்தொடக்கம், அது விருத்தியடைந்து இந்நிலைமைக்கு யான் வந்துள்ள நாள் வரைக்கும் நிகழ்ந்துள்ள சம்பவங்களை நிஷ்பாத மனத்துடன் யான் நோக்குங்கால், சென்ற காலத்திற்கும் நிகழ்காலத்திற்குமிடையே ஓர் பெரும் பிளவு இருப்பதைக் காண்கிறேன். இந்தப் பிளவு என் வாழ்க்கையுடன் மாத்திரம் சம்பந்தப்பட்டதாக இல்லை. பாரத சமுதாய வாழ்க்கையிலேயே இப்பெரும் பிளவு காணப்படுகின்றது. முந்தியிருந்த நிலைமைக்கும் இப்போதுள்ள நிலைமைக்குமிடையே இத்தகையபெரும் பிளவு ஏற்பட்டிருப்பதை உன்னும்போது என் மனதில் தாங்கொணாக் கவலை குடிகொள்ளுகிறது. கவலை மாத்திரமல்ல, ஏமாற்றம் அத்துடன் சேர்ந்து என் மனத்தைச் சஞ்சல சாகரத்தில் ஆழ்த்திவிடுகிறது.

ஆங்கிலேயர் வருகை

இப்பரந்த உலகில் உள்ள மனித சமுதாயத்துடன் நாம் இப்போது கொண்டிருக்கும் தொடர்பு, அக்காலத்தில்—அதாவது இன்றைக்கு 80 ஆண்டுகளுக்கு முன்-இங்கு வந்து எம்முடன் ஊடாடிப் பழகிய ஆங்கில மக்களாலே ஏற்பட்டது. ஆங்கிலேயருடைய சீரிய, பெருமை மிக்க இலக்கியங்களினூலேயே, அவர்களுடைய தன்மையை நாம் அறிந்தோம். அக்காலத்திலே எமக்கூட்டப்பட்ட கல்வி, இப்போதையைப்போல அதிகமானதுமல்ல, விதம் விதமானதுமல்ல; சாஸ்திர ஆராய்ச்சிக்கிடமானதுமல்ல. எனவே இந்திய மக்களின் ஆங்கிலக் கல்வி, ஆங்கில இலக்கியத் துறையிலேயே அதிகமாக ஈடுபட்டது. பேர்க் (Burke)ன் சொற்பொழிவுகள், மக்கோலே (Macaulay)யின் அடுக்கடுக்கான வசனங்கள், ஷேக்ஸ்பியரின் நாடகங்கள், பைரனி (Byron)ன் கவிதைகள், இவைகள் யாவும் இந்திய மக்களின் மனத்தை வசீகரித்தன. இவை எல்லாவற்றிலும் மேலாக, 19-ம் நூற்றாண்டில் நிலவிய ஆங்கில அரசியலின் பரந்த நீதியான கொள்கைகளும் இந்திய மக்களின் நன்மதிப்பைப் பெற்றன. ஆங்கில மக்களின் கவிதைகளைப் படித்து ரசித்து அநுபவித்தோம்; அவர்களின் வசன இலக்கியங்களை வாசித்து இன்புற்றெய்தினோம்; அவர்களின் அரசியற் கொள்கைகளை ஆராய்ந்து அகமகிழ்ந்தோம்; அவர்களின் சுதந்திர வேட்கையைக் கண்டு ஆர்வமிகுந்தோம்; நாமும் சுதந்திர வேட்கை கொண்டோம்; நாம் இழந்துபோன சுதந்திரத்தை மறுபடியும்பெற மனதார வாஞ்சையுற்றோம். பிரிட்டிஷ் மக்கள்—சுதந்திரத்தில் திளைத்த ஆங்கிலேயர்—சுதந்திரம், சகோதரத்துவம், சமத்துவம் என்பவற்றைப் போற்றிப் பேணிவரும் ஆங்கில மக்கள்—தோல்வியுற்ற எங்களுக்கும் தாம் பெற்ற இன்பமாகிய சுயராச்சியத்தைத் தாமே நல்கி நம்மையும் தம்மைப்போல ஆக்குவர் என்ற எண்ணம் எங்கள் தலைவர்கள் மனத்தில் நன்றாக வேரூன்றியிருந்தது.

அக்கால ஆங்கிலேயரின் பரந்த ஞானம்

இப்படியான ஓர் நம்பிக்கையை நம் தலைவர்கள் கொண்டிருந்ததற்குக் காரணம் என்ன? அக்காலத்தில் இங்கிலாந்து சுதந்திரத்தின் இருப்பிடமாக மிளிர்ந்தது. உலகில் துன்புறுத்தப்பட்டவர்களுக்கு அபயம் அளிக்கும் அரணாக விளங்கியது. தனது நாட்டின் சுதந்திரத்துக்காகப் பாடுபட்ட எவனையும் ஆங்கில மக்கள் வரவேற்று உபசரித்து அவனுக்கு வேண்டிய செய்வர். எனவே, இத்தகைய பரந்தஞானம், சகோதரத்துவ பாவனை சுதந்திர வேட்கை கொண்டிருந்த ஆங்கில மக்களுக்கு எனது உள்ளத்தில் உயர்ந்த பதவியளித்து மதித்து வந்தேன். ஏகாதிபத்திய வாஞ்சை அவர்களின் உயர்ந்த குணநலன்களை அக்காலத்தில் மாசுபடுத்தவில்லை. அவர்களின் உயர்ந்த குணத்தை நாம் அக்காலத்திற் சதா போற்றி வந்தோம். இப்போதுதானும்,—இங்கிலாந்து தனது உயர்ந்த லட்சியத்தை மறந்து, உகந்த கொள்கைகளைத் துறந்து நிற்கும் இக்காலத்திலும்—அந்தப் பழைய நினைவுகள் என் மனத்தில உதித்து அந்நாட்டின்பால் ஓர்வித அநுதாபத்தைத் தோன்றச்செய்கிறது.

எம்மை ஆளும் ஓர் அந்நியசாதியாரின் நல்லெண்ணத்திலும், அவர்கள் ஆற்றும் நன்மைகளிலுமே நாம் தங்கியிருந்த மனப்பான்மை சிறந்ததன்று. அப்படி நாம் தங்கியிருந்ததைப்பற்றிப் பெருமிதமடையவும் வேண்டியதில்லை. ஆனால் அது எங்களுடைய ஓர் சீரிய குணத்தைக் காட்டுகிறது. நாம் கேவலம் குறுகிய மனப்பான்மையுடையவர்களல்லர்; எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருளின் மெய்ப்பொருள் காணும் தன்மையுடையோம் நாம் என்பதை அந்நியராகிய ஆங்கிலேயரின் பெருந்தன்மையைக் கண்டு நாம் போற்றியதிலிருந்து காட்டுகின்றது.

நாம் ஆங்கில மக்களின் தன்மைகளைப் போற்றியதோடு மாத்திரம் நிற்கவில்லை. எங்கள் புராதன பழக்க வழக்கங்கள் பலவற்றைக் கைவிட்டு, ஆங்கிலேயரின் பழக்கவழக்கங்களையும் கைக்கொண்டோம்.

கண்டது கனவா?

எனது வாழ்க்கையின் முதல் அத்தியாயத்தில் நிகழ்ந்தது மேற்சொன்ன விஷயங்கள். காலஞ் செல்லச் செல்ல ஆங்கில மக்கள்பாற் கொண்ட என் மதிப்பிலே மாறுதல்கள் நிகழத் தொடங்கின. நான் கண்டதெல்லாம் கனவா என்ற எண்ணம் என் மனத்தில் உதித்தது.

சீர்திருத்தம், நாகரிகம், சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் என்று எல்லாம் நம் ஆங்கிலேயர் கூறினர்கள். ஆனால் அவர்களின் சொந்த விஷயங்கள் பாதிக்கப்படுங் காலத்தில், இம்மாபெரும் கொள்கைகள் யாவும் அவர்களாலேயே வெறுத் தொதுக்கப்படுவதைக் காலகதியிற் கண்டேன். ஆங்கில மக்களின் சீரிய குணத்தைப் பற்றிக் கனவு கண்டிருந்த யான்—ஜனநாயகம், சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பவற்றை அக்கனவில் கண்டுகளித்தயான்—வெளியே வந்து உண்மை நிலையைக் கண்டேன். நான் கண்டதுதான் என்ன? வறுமை! கொடிய வறுமை! பாரத மக்கள் வறுமைப்பிணியினால் படும் பஞ்சபடாப்பாடு! உலகத்தின் எந்தப் பகுதியிலாவது இப்படியான கொடிய வறுமை தாண்டவமாடுமா? இப்படியாகக் கோடிக்கணக்கான மக்கள் தவிப்பார்களா? என்று எண்ணியே விசாரணை செய்தேன். ஒரு இடத்திலாவது இப்படியான கொடிய வறுமை இல்லை என்பதை உணர்ந்தேன்.

(வரும்)

அப்பர் குருபூசை விழா

விஷு வருடம் சித்திரை ௴ 9-ந் திகதியன்று, யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபையின் ஆதரவில் ஷெ விழா யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ்வித்தியாசாலையிற் கொண்டாடப்பட்டது. முதலில் ஸ்ரீ நடராசருக்குப் பூசை நடத்தி விபூதிப் பிரசாதம் வழங்கப்பட்டது.

உடுவில் சிவஸ்ரீ ஐ. முத்துக்குமாரக் குருக்கள் அவர்கள் திருநாவுக்கரசுநாயனர் சரித்திரம் என்னும் பொருள்பற்றி 3 மணி நேரம்வரை சிறந்த சொற்பொழிவாற்றினர்கள். பிரசாரகர் நாயனருடைய சரித்திரத்தைச் சொல்லுவதோடமையாது சைவ சாதனங்களாகிய விபூதி ஐந்தெழுத்து முதலியவற்றின் பெருமையையும் தக்க சான்றுகளினால் விளக்கினமையும் கிரியைகளின் தத்துவங்களைப்பற்றியும் பயனைப் பற்றியும் ஆகமம் தமிழ் வேதம் முதலிய சமய நூல்களைக் கொண்டு விளக்கினமையும் போற்றத்தக்கதாம். இத்தகைய சிவாச்சாரியார்களைச் சைவக் கோயில்களில் திருவிழாக்காலங்களில் சமய விஷயமாகப் பிரசங்கம் செய்விப்பதற்கு ஒழுங்கு செய்தல் பெரும நன்மையை பயக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

மூளாய் முருகமூர்த்தி கோயிலில் சைவப் பிரசாரணம்

இக்கோயிலில் விக்கிரம ௵ பங்குனி ௴ ௯-ந் திகதி நிகழ்ந்த உற்சவத்திலன்று பிற்பகல் 2 மணி தொடக்கம் 4மணிவரை உடுவில் சிவஸ்ரீ ஐ. முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள் 'உற்சவத்தத்துவார்த்தம்' என்னும பொருள்பற்றி அன்பர்கள் கேட்டுப் பயன்படும் வண்ணம் சிறந்த சொற்பொழிவாற்றினர்கள். இக்கைங்கரியம நடப்பதற்குத் துணையாக இருந்தவர் தபாற்கந்தோர் அதிபர் ஸ்ரீமான் தம்பு அவர்களாவர்.

பஜாஜ் புதல்வருக்குத் தண்டனை

வார்தா ஏப் 19

சேத் ஜம்னலால் பஜாஜின் இளைய குமாரரான பாபு இராமகிருஷ்ண பஜாஜிக்கு இன்று 200 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. முன்னம் சத்தியாக்கிரஹஞ் செய்ததற்காக இவருக்கு 100 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

"என்குலம் எனக்கே"

(அ. வி. ம)

கற்பிற்கரசியாகிய சீதா பிராட்டியை அசோகவனத்திற் கண்டு திரும்பிய அநுமன், பல கற்பனைகளுடன் அவளைப்பற்றி இராமன் முன்னிலையில் வருணித்தான். அவள் மாண நோற்றிருந்த வாற்றை எல்லாம் காகுத்தன் தன் கமலக் கண்களால் காண நோற்றிலன் என்று ஒருபொழுது மனம் நொந்தான். ஆயினும், தான் ஒருவனே அச் சிறப்பைக் கண்டு வந்தபடியால் கொஞ்சம் இறுமாப்புடன் பேசத் தொடங்கினன்.

'என் பெருந் தெய்வமாகிய சீதா பிராட்டியானவள் சீரிய கற்புடன் இலங்கையில் காட்சியளிக்கின்றாள். அதனால், இச்சுவாக்கு மன்னனின் சூரியகுலமானது அவன் சந்ததியார் பேர் யாவும் அழிய, 'இராமர் வமிசம்' எனப்பட்டது. மிதிலை மன்னன் குலமும் அப்படியே சீதையின் பெயரால் 'ஜனககுல'மாயது. இராவணன் குலமும் அழிவு எய்த இருக்கின்றது' என்று சொல்லி முடித்தான். பின்பு தன்னைப்பற்றியும் ஒரு சிறிது புகழ்ந்து கூறிவிட்டான் அநுமன். இப்படியாக தன்னை மறந்து தற்புகழ்ச்சியில் ஈடுபடுவது அவன் என்றும் அறியாத செய்கை. ஆனால் இங்கே அப்படிச் செய்துவிட்டான்.

'என்குலம் எனக்குத் தந்தாள்,' என்னும்பொழுது தான் கடல் கடந்ததும் கடிமனை எரித்ததும் காரியம் நிறைவேற்றியதும் எல்லாம் தொனிக்கவே கூறியுள்ளான். வாயு வேகமாகவே சென்று அது முடித்து வருதல் வாயுவின் குமாரனுக்கன்றோ பொருந்தும். அநுமனும், அப்படியே செய்துவிட்டான். செய்து, 'மாருதி' என்னும் பெயரையும் நிலைநிறுத்தினன். ஆதலால் தான் நாம் சில வேளைகளில் எந்தக் குரங்கைக் கண்டவுடனும் 'அநுமான்' என்று அழைத்து விடுகின்றோம். இந்த உயர்வு நவிற்சிபற்றியே கூறப்படுவது.

ஆனால், சும்மா சொல்லளவில் மாத்திரம் இது தங்கிநிற்க வில்லை. செயலிலும் அநுமன் மற்றைய குரங்குகளிலும் பார்க்கச் சிறந்தவனென்பதைக் காட்டியே விட்டான். இவனுடைய செயல், வாலி ஒருவனன்றி வேறு யாராலும் செய்ய முடியாது என்பதை அவனே இறக்கும்பொழுது கூறிவிட்டு இறந்தான். வாலி இறந்ததால குரங்குக் குலத்தின் புகழ் மங்கியது. அதனைப் பின்னும் விளங்கவைத்தவன் அநுமான் ஒருவனே.

கொடிய இராவண இராக்கதனை முரியவடித்து உயிர்குடித்துக் குரக்கு பெற்றொழிலைக் காட்டப் பேறுபெற்றிலாத வாலி மன்னன் தன் அருகு நின்ற அநுமனைச் சுட்டி:-

"... ... ... பிறிதொன் றேனும்
உற்றது செய்கென்றாலும் உரியன
இவ் அநுமன்" என்றான்.

இராமனுக்குச் செய்யவேண்டிய பேருதவியின் பொறுப்பை வாலி, அநுமன்மேலே சுமத்திவிட்டு இறந்தான். அது கைகூடும்வரையும் அநுமனுக்கு மன அமைதி ஏற்படவில்லை. அந்த வாக்குறுதியையும் நினைந்து தன் குழையும் உள்ளி உள்ளி மனம் நோவான் அவன். "கண்டுவரும் என்றிருக்கும் காகுத்தன்" என்பான். காணாவிட்டால் உயிரைநீப்பது மேல் என்றும் உறுதி கொள்வான்.

ஈற்றில் சீதையைக் கண்டுவந்ததும் 'என் குலம் என்னது' என்று மனப்பூரிப்புடன் சொல்லுகின்றான். இங்கு, நமக்கு வாலியின் சொற்கள் பொருளுடையன என்பதை உணரவைத்தான் அநுமன்.

"அநுமன் என்பவனை ஆழிஐய! நின் செய்ய செங்கைத் தனுவென நினைதி", என்றனனன்றோ வாலி. இராமனுடைய செங்கைத் தனு எப்படிப்பட்டது? வேதம் தப்பியபோதும் அன்னான் தனுவுமிழ்சரங்கள் குறிதப்பா என்பதற்குச் சான்றுகள் பலப்பல உள. அவற்றை இங்கு தருதல் வேண்டா. அப்படிப் பெருமை அநுமனுக்கும் உண்டு.

அவன்மேல் வாலிமுதலிய பெரிய மல்வீரரும் நம்பிக்கை வைத்துப் போற்றியதற்குக் காரணம் கூறில் அவன் ஆற்றிய தொண்டுகளையே நாம் சிறப்பாக நோக்கல் வேண்டும். அவன் இல்லாவிட்டால் இராமாயணத்தில் அரைவாசி இல்லையன்றோ. அநுமனே தன்குலத்தைத் தன்னதாக்கினன் என்றாலும் பொருந்தும். ஆனால், அவன் தற்புகழ்ச்சி விரும்பாதவன். தான் செய்தனவற்றை எல்லாம் சீதாபிராட்டியின் கற்பால் நிகழ்ந்தனவென மாற்றிக் கூறிவிட்டான். என் குரக்கியல் தொழிலை எனக்குத் தந்தாள், என்றும் இராமபிரானுக்கு என்னைச் சிறந்த தூதனாக்கினள் என்றும் பொருட்படவே கம்பநாடர் இச்சொற்களை அமைத்துள்ளார். அவற்றைப் பொருட்படுத்துவது அவ்வவர் அறிவையே பொறுத்தது.

சுபம்.

பண்டித நேரு டேராடூனுக்கு மாற்றப்பட்டார்

பண்டித ஜவஹர்லால் நேருவும் ஸ்ரீ ஆர். எஸ். பண்டிதரும் நேற்று மாலை லக்ஷ்மணபுரிச் சிறையிலிருந்து டேராடூன் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டனர். ஐக்கியமாகாண அரசாங்கத்தாரால் ரிசேவ் செய்யப்பட்ட தனிவண்டி ஒன்றில் (இவ்வண்டி டேராடூன் எக்ஸ்பிரஸுடன் சேர்க்கப்பட்டது) அவர்கள் கொண்டு போகப்பட்டனர். அரசாங்கப் புகைரதப் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூடப்பட்டார்.

சுயராஜ்ய பவனில் மீண்டும் சோதனை

'கிளாக்' கைதியானார்

அலகபாத், ஏப், 18 உ

இன்று பகல் மீண்டும் பொலிஸார் சுயராஜ்ய பவனத்துக்கு வந்து சோதனையிட்டனர். அகில இந்தியக் காங்கிரஸ் கொமிற்றிக் காரியாலயக் கிளாக்குமாரில் ஒருவரான ஸ்ரீ கன்னையாலால் என்பவரை அவர்கள் கைது செய்தனர். அவரது வீடும் இன்று சோதனை யிடப்பட்டது.

ஹிந்திகவி கைதியானார்

தமயனுஞ் சிறைப்பட்டார்

ஜான்ஸி, ஏப், 18 உ

பிரபல ஹிந்தி கவியான ஸ்ரீ மைதிலி சரணகுப்தாவும் அவரது மூத்த சகோதரர் ஸ்ரீ ராமகிஷோர் குப்தாவும் நேற்றுமாலை இந்திய பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டனர். ஸ்ரீராமகிஷோர் குப்தாவின் குமாரரான ஸ்ரீசீனிவாச குப்தா 15 நாட்களுக்கு முன் கைதியானார்.

பம்பாய்ப் பழைய மந்திரி விடுதலை

பம்பாய், ஏப், 19 உ

பம்பாய்ப் பழைய மந்திரி ஸ்ரீமாக். நாரிமன் அவர்கள் தேக அசௌக்கியமாக இருப்பதால் அவர் 20 நாள் நிபந்தனையின் பேரில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார். இவர் ஏரவாட சிறையில் இருந்தார்.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் விஷு ௵
சித்திரை ௴ ௧௨௳ வியாழக்கிழமை

யுத்தநிலை

சென்ற ஒரு வாரத்திற்கிடையில் யுத்த விஷயமாக நேர்ந்த மாறுதல்கள்பல; ஐரோப்பிய யுத்தம் இப்பொழுது பயங்கரமான நிலையையடைந்து விட்டதெனக் கூறுதல் மிகையாகாது. யூக்கோஸ்லேவக்கியாவை ஜர்மனியர் தாக்கி அதன் தலைநகராகிய பெல்கிறேட்டையும் தங்கள் ஆகாயப்படையினால் நாசமாக்கி அச்சிறிய நாட்டினருடன் போர்செய்தனர்; அவ்வளவோடு நில்லாது, ஜர்மனியர் அச்சிறிய நாட்டிற்கு அயலிலுள்ள சாதியார்களாகிய ஹங்கேரியர், பல்கேரியர், ரூமேனியர் என்னுமிவர்களுக்குள் "கட்சாவடை" காட்டிவிட அவர்கள் இதுதான் வாய்த்த சமயமென்று அந்த யூக்கோஸ்லேவியாவிற் பாய்ந்து ஒரு பாகத்தைப் பங்கிட்டனர்; பிரதான பாகங்களை ஜர்மனியர் கைப்பற்றினர்; யூக்கோஸ்லேவிய அரசகுமாரனும் அந்நாட்டை விட்டகன்று அதென்ஸ் நகரில் ஒதுக்கிடந்தேடிச் சென்று அங்கே ஒதுங்கியிருக்கிறாராம். இந்த யூக்கோஸ்லேவியா முந்தி நடந்த மகாயுத்த முடிவில் பெல்கேரியா, ஹங்கேரி, ரூமேனியா என்னும் மூன்று நாட்டின் பாகங்களைக்கொண்டு ஆக்கப்பட்டது; அந்தக் காரணத்தினாற்றான் இப்பொழுது அம்மூன்று நாட்டினரும் அதன் ஒரு பாகத்தைப் பங்கிடவேண்டி நேர்ந்ததாம்.

ஜர்மனியர் யூக்கோஸ்லேவியாவை முடித்துக்கொண்டு கிரேக்க நாட்டிலே தாக்கலாயினர்; ஜர்மனியர் வரவைக் கண்ட இத்தலியரும் புத்தாக்கமடைந்து கிரேக்கரைத் தாக்கத் தொடங்கினர்: கிரேக்கருக்குத் துணையாக நின்ற பிருத்தானியப் படையும் ஜர்மனியப் படையும் முதன் முதல் இந்தச் சந்தர்ப்பத்திற்றான் எதிர்த்துச் சமர் செய்ய நேர்ந்தனவாகும். இப்பொழுது கிரேக்க நாட்டில் நடக்கும் யுத்தம் மிகவும் கோரமானதென மதிக்கத்தக்கது; இந்நாட்களில் வரும் தந்திச் சமாசாரங்களைக் கொண்டு இருபகுதியாருள் யார் வெற்றியுற்று வருகின்றனர் யார் தோல்வியுற்று வருகின்றனரெனச் சொல்லமுடியாமலிருக்கின்றது. முந்தித் தோல்வியுற்ற இத்தலியர் இப்பொழுது சில இடங்களில் வெற்றியடைந்து வருகின்றனரெனவுஞ் சொல்லப்படுகின்றது. ஆனால் பிருத்தானியப் படைத்துணை இருக்கும்போது கிரேக்கரைப் பகைவர் இலகுவில் வெல்லுவரென நாம் சொல்லமுடியாது.

அபிசீனியாப் பகுதியில் பழைய சக்கரவர்த்தியின் சைநியம் பிருத்தானிய சக்கராதிபத்தியச் சைநியத்துடன் இத்தலியரைப் புறங்கண்டு பல ஸ்தானங்களைத் திருப்பிப் பிடித்துவரலாயின. அபிசீனிய பழைய சக்கரவர்த்தியாகிய ஹெயிலிஸெலாஸி அபிசீனிய தலைநகராகிய அடிஸபாபாவிற்கு 110 மைல் தூரத்தில் வந்துவிட்டாராம். அபிசீனிய பழைய சக்கரவர்த்தி இரண்டாமுறையும் தம்முடைய சக்கராதிபத்தியத்தைச் சிலகாலம் ஆளுவர் என்ற ஒரு சோதிடவாக்கை அச்சக்கரவர்த்தி தம் இராச்சியத்தை இழந்த நேரத்திற் படித்திருக்கிறோம்; அச் சோதிடம் உண்மையாகுமென இப்பொழுது நம்புதற்கு இடமுண்டு;

இனி, கப்பல்களைக் கடலுள் அமிழ்த்துங் கருமம் இருபகுதியார்க்கு மிடையில் துரிதமாக நடைபெறுகின்றது. பிருத்தானிய ஆகாயப்படை பெர்லின் நகர் முதலிய ஜர்மனியதானங்களில், ஜர்மனியரும் பழிக்குப் பழி வாங்குபவர்களாய் லண்டன் முதலிய நகரங்களின்மீது வரைவின்றி வெடிகுண்டுகளைப் பெய்து சேதம் விளைக்கின்றனர். லார்ட் ஸ்ராம்ப் என்பவரும் அவர் குடும்பத்தினரும் பகைவரின் வெடிகுண்டிற்கு இரையானமை எவர்க்கும் துன்பத்தைத் தருவதாம். மேலும் ஜர்மனியர் பிருத்தானியாமீது படையெடுத்துச் செல்லும் நோக்கத்தைக் கைவிடவில்லையெனச் சொல்லப்படுகின்றது; பிரான்ஸிலும் ஹொலன் பெல்ஜியம் முதலிய பதிவான நாடுகளிலும் ஜர்மனிய சைநியத்தில் 85 பிரிவுகள் 7 பிரதம சேனாதிபதிகளுடன் வந்து ஆயத்தமாக நிற்கின்றனவெனத் தந்திச்செய்திகளைக் கொண்டு அறியக்கிடக்கின்றது.

சென்ற வாரத்தில் நடந்த கூட்டுறவு உடம்படிக்கைகளுள் ஜப்பானிய ருஷிய உடம்படிக்கை பிரதானமானதெனலாம். ஜர்மனியர் ஸ்பானியரையும் துருக்கியரையும் தங்களுடன் உடம்படிக்கை செய்வித்தற்கான உபாயங்களைச் சூழ்கின்றனராம்.

பகைவர்களின் செயல் இப்படியாக எங்கள் பிருத்தானியர் பக்கலிலும் முயற்சிகள் அதிகப்பட்டு வரப் பெலமும் ஏறி வருகின்றதாம். அமரிக்கர் பிருத்தானியருக்கு எவ்வகையான துணைகளையும் புரிவதற்கு முற்பட்டு நிற்கின்றனர். யுத்தம் இன்னமும் முற்றுமாகல் அமரிக்கரும் பிருத்தானியருக்குத் துணையாக யுத்தத்தில் இறங்காமலிருத்தல் முடியாதெனலாம். பிருத்தானிய சக்கராதிபத்தியப்படை மிகவும் பெலமாக வந்து சேருகின்றது. இப்பொழுது யுத்தம் நடக்கும் கோரமான நிலையை யூகித்துப் பார்த்தால் ஐரோப்பிய யுத்தம் விரைவில் ஒரு முடிவிற்கு வருமென நினைக்கவேண்டியிருக்கின்றது. அப்படி விரைவில் முடியுமோ இல்லையேல் வேறு விதமாக மாறி விடுமோ என்பதை யார்தாம் அறிவார்?

*

"சொற் சோர்வு படேல்"

இலங்கை இந்தியர் குடியேற்றப் பிரமாணத்தில் இந்தியருக்கு மிகவும் மாறாக நின்று வேலை செய்தவர் ஸ்தல பரிபாலனப் பகுதி மந்திரியாகிய மிஸ்ரர் S. W. R. D. பண்டாரநாயகா என்பது எல்லாருமறிந்த இரகசியமாகும். இந்த விஷயமாக அவர் சிங்கள மகாசனசபைக் கூட்டங்களிலும் வேறு கூட்டங்களிலும் பேசிய பேச்சும் செய்த சபதங்களும் கொஞ்சமல்ல. இலங்கைக்கு இந்தியரை வரவொட்டாது தடுக்கும் விஷயத்திலும் இங்குள்ள இந்தியரை இந்நாட்டை விட்டே ஓட்டும் விஷயத்திலும் மிஸ்ரர் பண்டாரநாயக நின்ற நிலையும் கைக்கொண்ட முறையும் வெருட்டிய வெருட்டும் தோற்றத்தளவிற் பயங்கரமானவை; இலங்கைத் தேசாதிபதி இலங்கை இந்தியர் விஷயத்திலே சிங்கள மந்திரிமார்களாகிய தங்களுக்கு மாறாக நிற்கின்றார் என்ற காரணம்பற்றி இத்தேசாதிபதியையும் மிஸ்ரர் பண்டாரநாயக அச்சுறுத்த ஆரம்பித்தாரல்லவா? இலங்கைத் தேசாதிபதியல்ல, குடியேற்றநாட்டு மந்திரி தானும் "எங்கள் நோக்கத்திற்குங் கொள்கைக்கும் மாறாக நின்றாலும் நாங்கள் நினைத்த கருமத்தை நிறைவேற்றியே தீருவோம்" என்று ஆரவாரஞ் செய்தார் மிஸ்ரர் பண்டாரநாயக; இதுமாத்திரமா? இல்லை! இல்லை!! இன்னும் உண்டு; இந்தியருடன் தேசாதிபதியும் ஏனைய அதிகார உத்தியோகஸ்தர்களும் ஒத்து நிற்பதால், இப்பொழுது நடக்கும் யுத்தத்திற்கென்று சேர்க்கப்படும் நிதிக்கு அரசினராகட்டும், வேறு எவராகட்டும் எந்தச் சங்கங்களாகட்டும் ஒருசதமேனுங் கொடுக்க நான் விடமாட்டேன் என்று பிரமாணமும் விதித்தார். ஐயோ! இந்த மந்திரியார் இப்படிச் சொல்லிப் பிடிவாதஞ் செய்தால், இங்கிருந்து யுத்தநிதி போகாமல் விட ஒருபோது பிருத்தானியர் தோல்வியடைவார்களோ என்று நாம் சந்தேகப்படத் தக்கதாயிருந்ததன்றோ! ஆனால் சடுதியில் மிஸ்ரர் பண்டாரநாயகாவின் மனத்தில் ஏதோ மாற்றமோ, இல்லையேல் தடுமாற்றமோ உண்டாய்விட்டது. "நாங்கள் பேச்சளவிற்றான் வீரம் பேசுவது, செயலளவில வந்தால் ஒன்றுஞ்செய்வதில்லை யென்று அரசாங்க அதிகாரிகளும் மற்றைச் சாதியாரும் எங்களை ஏளனஞ் செய்வதுண்டு; இத்தமுறை செயலளவிலும் செய்துதான் காட்டுவோம்" என்னும் கருத்துப்படச் சில தினங்கட்குமுன் ஒரு கூட்டத்தில் ஆர்ப்பரித்த மிஸ்ரர் பண்டாரநாயக, சென்ற இரண்டொரு நாட்களாகத் தம்முடைய பிடிவாதம், வீரவார்த்தை, பெருமிதம், அச்சுறுத்துதல் முதலிய எல்லாவற்றையும் சோரவிட்டு யுத்தநிதியின் பொருட்டுப் பணமுதவுதற்குச் சார்பாகக் கரையத் தொடங்கியதன் காரணமென்ன? தாம் சாதித்ததற்கு நேர்மாறுபடக் கூறுவதற்கு ஏது யாதோ? இப்பொழுது இந்த மந்திரியார் பல்லுப் பிடுங்கிய பாம்புபோற் சோர்வுடன் காணப்படுகின்றாரே! இதற்கு நியாயமென்ன என்று எவரும் அறிய ஆசைப்படுகின்றாரே! 'பேச்சுப் பேச்சென்னும்-பெரும்பூனை வந்தக்காற் கீச்சுக் கீச்சென்னுங் கிளி" என்ற விதமாக இந்தக் கிளிக்குக் கிட்டப் பெரும்பூனை வந்துவிட்டதா! இல்லையேல் "போதனை இலகு சாதனை கஷ்டம்" என்பதை மிஸ்ரர் பண்டாரநாயக அநுபவத்தில் அறிந்து கொள்ள நேர்ந்ததா? தம் உயிரைத் திரணமாக மதிக்கும் இந்தியர்களன்றோ இறுதிவரையில் தாம் எடுத்ததைச் சாதித்து நிறைவேற்றும் ஆற்றலுடையவர்கள். உயிர்மேலும் பொருள் மேலும் பதவியின் மேலும் ஆசைவைத்தவர்கட்கு "இந்தவடையேண்டி, இடுப்பிலே கையேண்டி" என்ற பிரகாரம், இந்தத் துணிவான பேச்சு ஏன்? படாடோபமேன்? மிஸ்ரர் பண்டாரநாயக போன்ற மந்திரிமார் இனிமேலாயினும் இப்படி வெள் வெருட்டுச் செய்யத் தலைப்படாதொழிதல் மரியாதையாகும்.

பரமேஸ்வர பண்டித கழகம்

நிகழும் 1941 ம் வருடம் சித்திரைத்திங்கள் 20 ந் தேதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒருமணியளவில் பரமேஸ்வர பண்டிதாசிரிய கலாசாலையிற் பயிற்றப்பட்ட பண்டிதர்கள் சேர்ந்தோர்கழகம் பரமேஸ்வர பண்டிதாசிரியகலாசாலை மண்டபத்தில் ஷெ கலாசாலை அதிபர் டாக்டர் சு. சிவப்பிரகாசம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அக்கழகநோக்கம் ஆராய்ச்சி விடயங்களிலீடுபடுதலே.

அக்கழகத்தின் போஷகராக ஸ்ரீமான் சு. நடேசபிள்ளை அவர்களும் தலைவராக டாக்டர் சு. சிவப்பிரகாசம் அவர்களும் உபதலைவர்களாக வித்துவான் க. கார்த்திகேயபிள்ளை, ஸ்ரீமான். ச. சிதம்பரப்பிள்ளை, ஆகியவர்களும் இணைக்காரியதரிசிகளாக பண்டிதர் மு. நவரத்தினம், பண்டிதர் ம. கந்தையா ஆகியவர்களும், தனாதிகாரியாக பண்டிதர் மு. இராசையா அவர்களும், கணக்குப்பரிசோதகர்களாக பண்டிதர் க. சுப்பிரமணியம், பண்டிதர் ச. சிதம்பரப்பிள்ளை ஆகியவர்களும் சபையினரால் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

அதன்பின் பண்டிதர் ம. கந்தையா அவர்களுடைய "சொல்லின் இயல்பு" என்றஆராய்ச்சி விஷயம்கழகத்திலே ஆராய்வுக்கெடுத்து மூன்று மணித்தியாலங்கள்வரை ஆராய்ந்து இன்னும் ஆராய்வதற்காக பின்னும் ஒருமுறைக்கு வைக்கப்பட்டு கூட்டம் இனிது நிறைவேறியது என்று ஷெ கழக இணைக்காரியதரிசிகள் தெரிவிக்கின்றனர்.

தானவரவு

பருத்தித்துறை அல்வாய் வடக்குக் க. சி. க. அருணாசலம்பிள்ளையவர்களுடைய அபரக்கிரியையில் அவரது புத்திரரால் சைவபரிபாலனசபைக்குத் தானமாக வரித்தனுப்பிய ரூபாய் 2 பெற்றோம்.

ஷெ சபைத் தனாதிகாரி

அங்கும் இங்கும்

("நகர சஞ்சாரி")

"வாய்ப்பேச்சில் வீரர்"

இலங்கைச் சிங்களமகாசபைத் தலைவர், பறிபட்ட சிங்கள சாம்ராச்சியத்தை மீண்டும் உத்தாரணம் செய்யத் திருஅவதாரம் புரிந்த புருஷன், பழுத்த அரசியல் ஞானி, ஸ்தலஸ்தாபன மந்திரி நமது மிஸ்ரர் பண்டாரநாயக்கா விஷுவருஷ ஆரம்பத்திலேயே தமது பழைய அரசியற் குட்டிக்கரணங்களை இட ஆரம்பித்து விட்டார். இந்தியர் குடியேற்றத்தைத் தடைசெய்யும் நோக்கமாக இலங்கைத் தேசாதிபதி தமது கொள்கையை மாற்றும் வரைக்கும், இலங்கையில் உள்ள எந்த ஸ்தல ஸ்தாபனங்களும் யுத்தஉதவிக்குப் பணம் உதவி செய்ய வொண்ணாது என்று தமது நிருவாக சபையைக்கொண்டு இந்த மாதிரி ஓர் தீர்மானம் நிறைவேற்றுவித்தார். ஊர்தோறுஞ் சென்று சண்டப் பிரசண்டமெனப் பிரசங்கமாரி பொழிந்தார். இலங்கை அரசியல் வானத்திலே புதிய ஓர் நட்சத்திரம் உதயமாகிவிட்டது. அதனுதவியால் சிங்கள மகாஜனங்கள் சுயராச்சிய பலனைத்தை அடையப் போகின்றார்கள் என்று ஓர் சிலர் எதிர் பார்த்தனர். ஆனால் மிஸ்ரர் பண்டாரநாயக்கா எதிர்பார்த்தபடி வழிகாட்டவில்லை. அவர் சென்ற வாரம் வெளிவந்த கசற் பத்திரிகையில் ஓர் பிரகடனம் வெளியிட்டுள்ளார். ஸ்தலஸ்தாபனங்கள் யுத்தநிதிக்கு உதவி செய்வதைத் தடுக்கும் தீர்மானத்தை ரத்துச் செய்ய வேண்டும் எனத் தமது நிருவாகசபையில் தாம் எடுத்துக்கொள்ளப் போவதாகவும், அந்நிதிக்கு உதவி செய்ய விரும்பும் ஸ்தாபனங்கள் ஏற்கனவே அறிவிக்க வேண்டும் என்றும் அவர் வெளியிட்டுள்ளார். இப்படியான குட்டிக் கரணத்தை மிஸ்ரர் பண்டாரநாயக்கா இட்டதன் காரணம் என்ன? பலர் பலவிதமாகக் கூறுகின்றனர்.

* * *

தேசாதிபதியின் பெருந்தடி

இலங்கையில் உள்ள அரசியல் வாதிகள் — அவர்களிலும் விசேஷமாக பண்டாரநாயக்காக் கோஷ்டியினர்-எத்தகையர் என்பதை மகா புத்திசாலியாகிய நம் தேசாதிபதி அறியாமல் இல்லை. பட்டவேட்டை பதவிமோகம் என்பனவே இங்குள்ள அரசியற் புலிகளின் மூலாதார நோக்கம் என்பதைத் தேசாதிபதி நன்கு அறிவர். இங்கிலாந்து தன் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் இச்சமயத்தில், பிரிட்டிஷாருக்கு விரோதமான இச்செயலைப் புரியும் ஒருவர், பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தின் ஓர் பகுதியில் மந்திரியாகக் கடமை பார்க்கக் காரணம் உண்டா என்று நம் தேசாதிபதி மிஸ்ரர் பண்டாரநாயக்காவைத் தம் யதேச்சாதிகாரம் என்னும் பெருந்தடியைக் காட்டிக் கேட்டிருக்கலாம் என்றும், அதன் பயனாக மிஸ்ரர் பண்டாரநாயக்கா, தம் சுயரூபத்துடன் வெளிப்பட்டுக் குதிக்க மறு உத்தாரவைப் பிறப்பித்தார் என்றும் கூறப்படுகிறது. எது எப்படியிருந்த போதிலும், மிஸ்ரர் பண்டாரநாயக்கா தமது மந்திரிப் பதவியையும் மாதம் 1500 ரூபா வேதனத்தையும் இழக்காமல் பாதுகாத்துக் கொண்டாரே! அவ்வளவே போதும்!

* * *

ஆலயங்களில் உயிர்க்கொலை

நமது ஹிந்து சமூகத்திற்கு மாசளிக்கும் செயல்களில் ஒன்று ஆலயங்களில் ஆடு கோழி பலியிடும் கொடிய வழக்கம் என்பதை எவரும் மறுக்கமுடியாது. எவ்வுயிர்க்கும் அன்னையாய் விளங்கும் ஈசன் சந்நிதானத்தில் வாய் பேசாப் பிராணிகளை இழுத்துக் கொண்டு போய் அவை அம்மாவென்றலற அவற்றின் ஆருயிரைக் குரோதமாகப் போக்கும் கொடியவழக்கத்தை, இந்த இருபதாம் நூற்றாண்டிலும் ஹிந்துக்களாய நாம் பார்த்துச் சகித்துக் கொண்டிருத்தல் எவ்வளவு கேவலமான செயலாகும். கருணை வள்ளலாகிய இறைவன் ஆடு கோழி முதலியவற்றின் ஊனத்தையோ உதிரத்தையோ விரும்புவதில்லை. கேவலம் மூடநம்பிக்கை கொண்டுள்ள பாமர மக்கள் தாம் செய்வதென்னவென்றறியாது இக்குரூரமான செயல்களை ஆற்றுகின்றனர். அவர்களுக்கு நம் சமயத்தின் உண்மைத் தன்மையை விளக்க வேண்டும். அவர்களின் அறியாமையை, மூடநம்பிக்கையை, குறுகிய மனப்பான்மையை ஒழிக்க வேண்டும். சைவ ஸ்தாபனங்கள் இவ்விஷயத்தைப் பற்றிச் சிந்தித்தால் என்ன? இப்பிரதான தொண்டினை ஆற்றுவதற்குக் காலதாமதம் செய்தல் முறையல்ல.

நீதிஸ்தலம்

(நமது நிருபர்)

கூரையைப்பிரித்துத் திருட்டு

பாஷையூரில் வசிக்கும் பதினன்கு வயதுடைய எம். பதிரேசன் என்னும் சிறுவன் அவ்வூர்த் தம்பிப்பிள்ளை சுந்தரம் பிள்ளையின் கடைக் கூரையைப் பிரித்துக் களவெடுத்ததாகக் குற்றஞ்சாட்டி ஒருவழக்குநீதிபதி திரு. குவின்டன் பேர்ணண்டோ முன்னிலையில் யாழ்ப்பாணம் பொலிசார்தொடர்ந்தனர். எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டான். நீதிபதி எதிரிசெய்த குற்றம் மிகவும் பாரதூரமானதெனக்கூறி அவனுக்கு ஆறு அடித்தண்டனை விதித்தார்.

பெண்களால் வந்த வினை

கோப்பாய் வடக்கில் வசிக்கும் சின்னத்தம்பி-மாணிக்கன் அவ்வூர்க் கட்டையன் வல்லிக்குச் சென்ற 1940 ம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ந் திகதி ஓர்கத்தியாற் குத்திக்கொலைசெய்ய எத்தனித்ததாகக் குற்றஞ்சாட்டிய வழக்குச் சப்பிறீம் கோட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கின் சாரமாவது:—

இச்சம்பவத்திற்கு மூன்றுநாளைக்கு முன்னர் எதிரியினுடைய சகோதரன் நாகலிங்கம்மீது மனைவி நாகிவைத்த தாபரிப்பு வழக்கில் நாகலிங்கத்திற்குக் காசுகட்டாததற்கு மறியற்றண்டனை விதிக்கப்பட்டது. இச்சம்பவத்தன்று பிற்பகல் எதிரியும் எதிரியின் சகோதரிகள் சின்னக்குட்டியும் சின்னனும் நாகியினுடைய வீட்டுப்படலைக்குச் சென்று நாகியைவைது நாகலிங்கத்தை மறியலுக்கு அனுப்பிவிட்டாய் பார்த்துக் கொள்ளுவோமென்றனர். நாகி நீங்கள் என்னசெய்யப்போகிறீர்கள் என்று சொல்லிக்கொண்டு தனது வீட்டுக்குவெளியே ஒழுங்கையில் வந்தாள். அப்போது சின்னக்குட்டியும் நாகியும் ஒருவர் சேலையில் மற்றொருவர்பிடித்தபடி இழுபட்டனர். இத்தருணத்தில் சின்னன் நாகிக்கு ஒருகத்தியலால் தலையில்அடித்து பின்னர் அவ்விடத்தைவிட்டு அவர்கள் போய்விட்டனர். நாகி ஐயோவென்று சத்தமிட்டாள். நாகியினுடைய சத்தம் கேட்டு நாகியின்ஒன்றைவிட்ட சகோதரன் கட்டையன்---வல்லி அங்குஓடிவந்தான். இச்சம்பவத்தையறிந்த அவன் நாகியின் சொந்தச் சகோதரனாகிய விசுவனைக் கூட்டிவரச் சென்றான். அப்போது இவ்வெதிரி அவனுக்கு ஒருகத்தியாற் குத்தினான். பின்னர் விசுவன் அவ்விடத்திற்கு வந்துகாயக்காரர்களை ஒருகாரிலேற்றிக் கோப்பாய்ப்பொலிஸ்நிலயத்திற்கும் பின்னர் ஆஸ்பத்திரிக்கும் கொண்டுசென்றான். ஆஸ்பத்திரியில் வல்லியின் வாய்முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது. எதிரியின் சகோதரி சின்னனுக்கும் காயங்கள் காணப்பட்டு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டாள்.

விசாரணை நடைபெறுகிறது.

திருட்டுமாட்டை வைத்திருந்தோருக்குச் சிறை

வடலியடைப்பைச்சேர்ந்த நாராயணர்—சின்னத்தம்பி மானிப்பாயில் வசிக்கும் கே. செல்வநாயகத்தின் களவுபோனமாட்டை வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிபதி எதிரிக்கு இரண்டுமாதச் சிறைத்தண்டனை விதித்தார்.

காப்பைத் திருடிய கள்வன்

திரும்பவும் மகோனுவுக்குப் போகத் தீர்ப்பு

முன்னரும் மகோனுவுக்குத் தண்டனைக்காக அனுப்பட்டவனும் ஆறுமாசத் தீந்து நன்னடத்தையில் விடப்பட்டவனும் பதினைந்து வயதுடையவனுமாகிய பெருமாள்-செல்லையா வென்னும் இந்தியன் மானிப்பாய் மருதடிப்பிள்ளையார் கோவில் உற்சவகாலத்தில் கோண்டாவிலில் வசிக்கும் மாணிக்கம்-கனகராசாவின் ரூபா 15- பெறுமதியான காப்பைப் பறித்ததாகக் குற்றஞ் சாட்டி யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிபதி திரு-குவின்டன் பேர்ணண்டோ முன்னிலையில் தொடரப்பட்டிருந்த வழக்கில் எதிரி குற்றத்தையும் தான் முன்னரும் இருமுறை தண்டிக்கப்பட்டதையும் ஒத்துக்கொள்ளவே நீதிபதி எதிரியைத் திரும்பவும் மூன்று வருடத்திற்குப் மகோனுவிற்குப் போகும்படி கட்டளையிட்டார்.

என்ஜின் திருடியவனுக்கு இரண்டுமாதம்

வண்ணார்பண்ணையில் வசிக்கும் முத்தையா-கந்தையாவுக்குரிய ஒரு கார் என்ஜினை K-பண்டா களவாடினதாகக் குற்றஞ்சாட்டிய வழக்கில் எதிரிகுற்றத்தை ஒப்புக்கொண்டான். நீதிபதி திரு-குவின்டன் பேர்ணண்டோ எதிரிக்கு இரண்டு மாதக்கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

யுத்த அரங்கம்

பால்க்கன் யுத்தம்

இப்போது நிகழும் யுத்தம் முப்பிரிவுகளாகவகுக்கப்படலாம்; பால்க்கன் யுத்தம்; சமீப கிழக்குப் பகுதி யுத்தம்; அத்லாந்திக் யுத்தம் என்பனவே அவை. ரூமேனியா, பல்கேரியா, ஹங்கேரி என்னும் சிறிய நாடுகளை "ஸ்வாஹா" பண்ணிய அரக்கன் ஹிட்லர், தனது ஜம்பத்தை யூகோஸ்லேவியாமீது காட்டியதும், வீரசுதந்திரம் வேண்டியுள்ள அத்தேச மக்கள் ஹிட்லரின் அக்கிரமத்துக்குப் பணியாது "மானமது போகில் கவரிமான் அனைய ரோர்" என்னும் மொழிப்படி அஞ்சாது போர் புரிந்து ஈற்றில் தோல்வியுற்றதும், மாடமாளிகை கூட கோபுரங்களுடன்பொலிந்த அந்த நாட்டை நாஜிய அரக்கப் படைகள் தரைமட்டமாக்கியதும் ஏற்கனவே நாம் அறிந்த செய்திகளாகும். யூகோஸ்லேவிய நாடு இப்போது துண்டிக்கப்பட்டு விட்டது. அதன் ஓர் பகுதியான குரோஷ்யா சுயேச்சை நாடாக— ஹிட்லரின் அடிமையாக— ஆக்கப்பட்டிருக்கிறது. மீதியுள்ளதை எவ்வாறு தமக்குள் பங்கு போடலாம் என்று ஜெர்மனி, இத்தலி, ரூமேனியா, பல்கேரியா, ஹங்கேரி என்பன யோசித்துக் கொண்டிருக்கின்றன. ஜெர்மன் அந்நியநாட்டு மந்திரியான ரிபன்ரோப்பும், இத்தலிய அந்நியநாட்டு மந்திரியான கவுண்ட் சியானோவும், இது சம்பந்தமாக ஏற்கனவே கலந்தாலோசித்து ஓர் முடிவுக்கு வந்திருக்கிறார்கள். ஆனால் அம்முடிவின் விபரம் பகிரங்கமாகவில்லை.

0 0 0

கிரேக்கர் வீரம்

மிருக வெறி பிடித்த பாஸிப் பைசாசங்களும் நாஜிஸப் பூதங்களும் சேர்ந்து கிரேக்க நாட்டைப் பலமாகச் சூறையாடி வருகின்றன. பிரிட்டிஷ் படைகளும், சாம்ராஜ்ய வீரரும் கிரேக்கருக்கு அருந்துணை புரிந்து வருகின்றனர். எனினும் மஸிடோனியா, தெஸாலி முதலிய பிரதேசங்களைப் பகைவர் ஆக்கிரமித்துக் கொண்டனர். பிரிட்டிஷ் படைகள் இப்போது மிகவும் தீவிரமாகப் பகைவர்கள் முன்னேறிச் செல்வதைத் தடுத்துவருகிறார்கள். பால்கன் யுத்தத்தில ஜெர்மனியருக்கு அபரிமிதமான சேதம் விளைந்திருக்கிறது எனினும் அவர்கள் தங்களுடைய அபார ஆயுத வலிமையினால் முன்னேறிக் கொண்டு வருகின்றனர்.

0 0 0

அபிசீனியாவில்

இத்தலிய சாம்ராச்சியம், அபிசீனியாவில் பிரிட்டிஷ் வீரர்களால் சிதறடிக்கப்படுகின்றது. பல்லாயிரக் கணக்கான இத்தலியர் சிறைப்படுத்தப்பட்டிருக்கின்றனர். அபிசீனியாவின் பழைய சக்கரவர்த்தியும் இப்போது தலைநகர்க்குச் சமீபமாக நிற்கின்றார். அவரை வரவேற்கச் சகல ஏற்பாடுகளும் செய்ய வேலைகள் ஜரூராக நடக்கின்றன.

0 0 0

பிரிட்டிஷ் கடற்படை ஆதிக்கம்

அத்லாந்திக் மகாசமுத்திரம் மார்க்கமாக வரும் அமெரிக்க உதவிச் சாதனங்களைக் கெடுப்பதற்கு நாஸிகள் கங்கணம் கட்டி நிற்கின்றனர். ஏராளமான ஜெர்மன்நீர்மூழ்கிகளும் யுத்தக் கப்பல்களும் காரியமாக அமர்த்தப்பட்டிருக்கின்றன. ஆனால் பராக்கிரமம் வாய்ந்த பிரிட்டிஷ் கடற்படை பல ஜெர்மன் நீர்மூழ்கிகளை வேட்டையாடி அவற்றைப் பாதாளலோகத்திற்கு அனுப்பிவிட்டன. சென்ற திங்கட்கிழமை வட ஆபிரிக்காவில், பகைவர்க்குரிய தரிப்போலித் துறைமுகத்தைப் பிரிட்டிஷ் விமானங்கள் நாசமாக்கியிருக்கின்றன. அத்துறைமுகத்தில் நின்ற ஆறு சாமான் கப்பல்களும், ஒரு போர்க் கப்பலும் பிரிட்டிஷ் பீரங்கிகளால் நாசமாக்கப்பட்டன.

0 0 0

லண்டன் மீது குண்டுமாரி

சில நாள் ஓய்ந்திருந்த ஜெர்மன் விமானங்கள் மீண்டும் இங்கிலாந்து மீது பறந்து லண்டன் நகர்மேலே குண்டுமாரிவருஷித்துப் பலசேதங்களை விளைத்தன. பாராளுமன்றத்துக் கட்டிடத்தின் ஓர் பகுதி சேதமடைந்தது. இற்றைவரை ஆகாய விமானப்படை வெடிப்பால் இங்கிலாந்தில் இறந்தவர்கள் தொகை 35000 வரை எனக் கணிக்கப்பட்டிருக்கின்றது. பிரிட்டிஷ் விமானிகளும் ஜெர்மனிமீது பறந்து அதன் தலைநகரமாகிய பெர்லின்மீது வெடிகுண்டுகளை வருஷித்து மகத்தான சேதங்களை உண்டாக்கினர். ஜெர்மனியின் கப்பல் கட்டும் பிரதான துறைமுகமான கில் பிரிட்டிஷ்விமானங்களால் தவிடுபொடியாக்கப்பட்டிருக்கிறது.

0 0 0

மூளாய்க்கூட்டத்தில் முஷ்டிச் சண்டையா?

ஆஸ்பத்திரிச் சபையில் அங்கத்தவர் அமளி! அவர்களுக்கிடையே கட்சி பேதம்!

தலைவர்—காரியதரிசி பிணக்கு

(நமது நிருபர்)

மூளாய்க் கூட்டுறவு ஐக்கிய ஆஸ்பத்திரிச் சபையின் விசேஷப் பொதுக் கூட்டமொன்று சென்ற ஞாயிற்றுக் கிழமை இரண்டுமணி நேரம் நடைபெற்றதின் பின் குழப்பத்தில் முடிந்தது.

கூட்ட நிகழ்ச்சிக் குறிப்பில் புதிய டாக்டர் ஒருவரை நியமித்தல், மருந்துகள் வாங்குதற்குக் கடன் வாங்குதல் ஆகியவை உட்பட 7 அம்சங்களடங்கியிருந்தும் முந்திய கூட்ட அறிக்கையைப் படிக்கும் பொழுதே சபையில் குழப்பம் ஏற்பட்டு விட்டது.

தலைவர் திரு. கே. சுப்பிரமணியம் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். கூட்டம் ஆரம்பித்துச் சிறிது நேரமாவதற்குள் கூட்டம் கூடுவதற்கான சுற்றறிக்கை அங்கத்தவரனைவர்க்கும் ஏன் கிடைக்கவில்லை என்று ஒரு அங்கத்தவர் கேட்டார். எல்லோருக்கும் அறிக்கைகள் வழங்கப்பட்டிருப்பதாகத் தலைவர் தெரிவித்தார்.

தலைவர் கட்சிசேர்ந்திருப்பதால் கூட்டத்திற்குத் தலைமை வகிக்க மற்றொரு தலைவரைத் தெரிவு செய்ய வேண்டுமென்று திரு. வி. எஸ். விசுவலிங்கம் பிரேரித்தார்.

திரு. கே. குமாரசுவாமி அதை ஆமோதித்தார். திரு. எஸ். மயில்வாகனம் அத்தீர்மானத்தை ஆட்சேபித்தார்.

அதன்பேரில் சபையில் குழப்பம் ஏற்பட்டு பலர் ஒரே சமயத்தில் எழுந்து நின்று பேச முயற்சித்தனர்.

தலைவர் காரியதரிசியை அழைத்து வாக்குச்சம்மதம் கொடுக்க உரிமையுள்ளவர்களின் பெயரை வாசிக்கும்படி கூறினர். அங்கத்தவர்களல்லாதவரை பின்னாலிருந்த இடங்களுக்குப் போகும்படி அவர் கேட்டுக் கொண்டார், ஆனால் ஒருவராவது இருந்த இடத்தை விட்டு அசையவில்லை.

காரியதரிசி பெயர்களை வாசித்த பின்னர் தலைவர் தாம் இக்கூட்டத்தைப் பதினொரு அங்கத்தவர்கள் வேண்டிக் கொண்டதின் பேரில் கூடியதாகத் தெரிவித்தார்.

இந்த வேண்டுகோள் முதலில் காரியதரிசிக்கு அனுப்பப்பட்டது. அவர் கூட்டத்தைக் கூட்டுவதற்கு மறுத்து விட்டார். அதன் பேரில் தாமே இக்கூட்டத்தைக் கூட்டியதாகத்தலைவர்தெரிவித்தார்.

முந்திய கூட்ட அறிக்கையைப் படிக்கும்படி தலைவர் காரியதரிசியைக் கேட்டார். இக்கூட்டம் முறைப்படி கூட்டப்பட்டதா? என்று திரு எம். செல்லப்பா கேட்டார். திரு செல்லப்பா அங்கத்தவரில்லையென்ற காரணத்தால் அவர் கூட்டத்தில் கலந்து கொள்வதை திரு எஸ். ஆறுமுகம் ஆட்சேபித்தார். திரு செல்லப்பா சபையின் தற்காலிக தலைவராகக் கடமை ஆற்றியிருக்கிறார். எனக் கூக்குரல்கள் கிளம்பின.

சபையில் மீண்டும் சத்தம் போடப்பட்டதால் அங்கத்தவர்களாக ஊர்ஜிதம் செய்யப்படாதவர்களின் பெயர்களைக் காரியதரிசி படித்தார். முதலாவதாக திரு செல்லப்பாவின் பெயர் வாசிக்கப்பட்டது. திரு வி. பொன்னம்பலம் குதித்தெழுந்து திரு செல்லப்பாவை நோக்கிச் சென்று 'வெளியே போ' 'வெளியே போ' என்று உரக்கச் சொன்னார்.

பல அங்கத்தவர்கள் இதைக்கண்டித்து "தலைவர் என்ன செய்கிறார்" என்று கேட்டார்.

இத்தகைய நடத்தை சகிக்க முடியாதென்றார் ஒரு அங்கத்தவர்.

ஆத்திரம் அதிகரித்தது. அங்கத்தவர்கள் சப்தமிட்டனர் ஒருவரை ஒருவர் பிடித்து தள்ளினார்கள்.

காரியதரிசி ஒரு மேசைமீது ஏறி நின்று கூட்டத்தினரை ஒழுங்கை நிலைநாட்டும்படி கேட்டுக் கொண்டார். அவருடைய பேச்சு பயனளிக்கவில்லை.

மற்றொரு தலைவரை நியமிக்க வேண்டுமென்று ஆரம்பத்தில் பிரேரித்த திரு விசுவலிங்கம் தமது பிரேரணையை வற்புறுத்தினார். தலைவர் முந்திய கூட்ட அறிக்கையைப் படிக்க வேண்டுமென்றார். அது படிக்கப்பட்ட பின்னர் ஒவ்வொருவருக்கும் பேசச் சந்தர்ப்பம் அளிப்பதாக அவர் கூறினார்.

அறிக்கை படிக்கப்படு முன்னர் திரு விஸ்வலிங்கத்தின் தீர்மானம் சபையின் சம்மதத்திற்கு விடப்பட வேண்டுமென்று பல குரல்கள் கிளம்பின.

மீண்டும் குழப்பமுண்டாகி கூட்டம் கலைந்தது.

இந்திய அரசியல்

பாகிஸ்தான்—திராவிடஸ்தான் — சீக்கிஸ்தான்—ஹிந்துஸ்தான்

இம்மாத ஆரம்பத்தில் முஸ்லிம் லீக் மகாநாடு சென்னையிற் கூடிக் கலைந்து விட்டது. தான் தோன்றித் தலைவர் மகமதலி ஜின்னா வழக்கம் போல், ஆக்ஞை, வசைமாரி, ஒப்பாரி, வெருட்டு என்பன பொதிந்துள்ள தமது தலைமைப் பிரசங்கத்தை அளந்து கொட்டினார். முஸ்லிம்கள் பெரும்பான்மையினராகவுள்ள மாகாணங்கள் ஒவ்வொன்றும் தனித்தனி இராச்சியமாக விளங்க வேண்டும், சமஷ்டி, மத்திய சுயாட்சி என்பன மருந்துக்குக் கூடிலும் இருக்க வொண்ணாது; இப்படியாகப் பூர்ண சுதந்தரம் அடைவிக்கும் முஸ்லிம் மாகாணங்களில் உள்ள ஹிந்துக்கள் முதலிய சிறுபான்மையினர் எதற்கும் அஞ்ச வேண்டியதேயில்லை; அவர்களுக்கு முஸ்லிம்கள் தாராள மனத்துடன் பூரண பாதுகாப்பளிப்பர் என்றெல்லாம் மிஸ்டர் ஜின்னா கூறினார். முஸ்லிம்களுக்குப் பாகிஸ்தானுடன் மாத்திரம் அவர் திருப்தியில்லை. முஸ்லிம் ஆகிய அவர், கன்னடியரான ஈ. வே. ராமசாமி நாயக்கருக்குத் திராவிடஸ்தானும் வழங்க உதவி செய்வதாகவாக்களித்திருக்கிறார். ஜின்னாவின் பாகிஸ்தானம் என்பது பகற்கனவு என்பதற்கு ஐயமின்று. பாரத நாட்டைப் பங்குபோட ஹிந்துக்கள், சீக்கியர் முதலியோர் ஒரு போதும் ஒருப்பட மாட்டார். அதுவுமன்றி ஏறக்குறைய 90 லட்சம் ஜனத்தொகையுடைய மோமின் முஸ்லிம்களும், ஏனைய தேசிய முஸ்லிம்களும் பாகிஸ்தான் திட்டத்துக்கு முழு விரோதமாக நிற்கின்றனர். உண்மையைக் கூறுங்கால் ஜின்னாவுக்கோ முஸ்லிம் லீக்கிற்கோ முஸ்லிம் பொது ஜனங்களுக்கிடையே ஒரு தனியாவது செல்வாக்குக் கிடையாது. இந்தியாவில் உள்ள முஸ்லிம் மாகாணங்கள் எதிலாவது முஸ்லிம்லீக் இப்போது ஆட்சி செலுத்த முடியவில்லை. வடமேற்கு மாகாணத்தில் காங்கிரஸ் ஆட்சி, பஞ்சாபத்தில் யூனியனிஸ்ட் கட்சி ஆட்சி; சிந்தில் முஸ்லிம் லீக்கின் பரம விரோதியான அல்லா பக்ஷின் ஆட்சி, வங்காளத்தில் பிரஜாக் கட்சி ஆட்சி; அசாமில் கட்சியற்றோரவர்கள் ஆட்சி; இது மாத்திரமன்றி சிந்து மாகாணத்தில் முஸ்லிம் தேர்தல்கள் சில இடங்களில் கூட்டுத் தொகுதி மூலம் நிகழுகின்றன. இத்தேர்தல்களைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்று முஸ்லிம் லீக் அறிவித்தது. ஆனால் அது வாய்க்கவில்லை. முஸ்லிம் லீகின் தூண்களில் ஒருவராய் இருக்கும் பஞ்சாபப் பிரதம மந்திரி சேர். சிக்கந்தர் ஹயாத்கான், சென்னை முஸ்லிம் லீக் மகாநாட்டிற்குச் சமுகம் அளிக்கவில்லை. அதுவுமன்றி, பஞ்சாபத்தில், பாகிஸ்தானும் வேண்டாம், சீக்கிஸ்தானும் வேண்டாம்; பஞ்சாபமே இருக்கட்டும் என்று அவர் கூறியிருப்பதுவுங் கண்டுக் குறிப்பிடத்தக்கது.

ஆனால் முஸ்லிம் லீகின் கொள்கைக்குப் பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தின் ஆதரவுண்டா? முஸ்லிம் லீக்கையும் ஜின்னாவையும் சிருட்டித்தவர்கள் பிரிட்டிஷ் இராச தந்திரிகள்தான். ஆனால் இப்போது அவர்கள் தங்கள் பிழையை உணர ஆரம்பித்து விட்டார்கள் என்றே எண்ணவேண்டியிருக்கிறது. சிந்தின் தேசாதிபதியாக இருந்த சேர் லான்செலற் கிறஹாம், "பாகிஸ்தான் திட்டம் உதவாது; அதனால் பிரயோஜனம் இல்லை" என்று விட்டார். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அபிப்பிராயத்தை அநேகமாகப் பிரதிபலித்துக் காட்டும் "டைம்ஸ்" பத்திரிகையும் ஜின்னா மீது தன் வெறுப்பைக் காட்டியிருப்பதில் இருந்து காற்று இப்போது எத்திசையை நோக்கிச் செல்லுகிறது என்பதைக் குறிக்கிறது.

0 0 0

பதவி ஏற்க வேண்டும்

தீப்பொறி சிறிதாயினும், அது ஓர் பாரிய வீட்டையும் நாசமாக்க ஏதுவாகும். எனவே முஸ்லிம் லீகின் விஷவாயு பாரத நாட்டிற் பரவவிட வொண்ணாது; காங்கிரஸ்சட்ட மறுப்பை நிறுத்திவிட்டு, மீண்டும் பதவி ஏற்க வேண்டும் என்று பிரபல தேசியப் பத்திரிகையான "ஹிந்து" ஆலோசனை கூறுகிறது. இந்த ஆலோசனையை இந்தியப் பிரபலஸ்தர் பலர் ஆமோதிக்கின்றனர். இவ்விஷயமாகக் காங்கிரஸ் அதிகாரபீடம் இன்னும் ஒருவிதமான அபிப்பிராயமும் வெளியிடவில்லை. சமீபகாலத்தில் பம்பாயிற் கூடிய தலைவர்கள் மகாநாட்டுத் தீர்மானங்கள் விஷயமாக இராஜப்பிரதிநிதியுடன் சேர் தேஜ்பகதூர் சப்ரூ சம்பாஷித்தாரல்லவா? அச்சம்பாஷணையின் முடிவு எவ்விதமாய் வருமோ, அம்முடிவையே காங்கிரஸ் காத்திருக்கிறது என்று யூகிக்க இடமிருக்கிறது. இன்னும் சில தினங்களில் யாவும் தெளிவாகி விடும் என்று காத்திருக்கலாகும்.

0 0 0

ஹிந்து மகாசபை

முஸ்லிம் லீக்கின் பாகிஸ்தான் கூச்சல் அதிகரிக்க அதிகரிக்க, ஹிந்து மகாசபையின் வலிமையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. வீர சவர்க்காரின் தலைமையின் கீழ், ஹிந்துமகாசபை, இப்போது பாரத நாட்டில் தன் செல்வாக்கை உறுதிப்படுத்திக் கொண்டே வருகிறது. பாகிஸ்தான் பிரச்னை, இந்தியாவுக்குச் சுயேச்சை என்பன சம்பந்தமாகப் பிரிட்டிஷாரின் மனப்பான்மை என்ன என்பதை அறிந்து, அம்மனப்பான்மை நாட்டின் நலத்துக்கு விரோதமானது எனக் காணப்பட்டால் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்ய வேண்டும் என மதுரையிற் கூடிய ஹிந்து மகாசபையில் தீர்மானிக்கப்பட்டது. இதன்பின் இப்பிரச்னைகள் சம்பந்தமாக வீரசவர்க்காருக்கும் இராஜப் பிரதிநிதிக்குமிடையே கடிதப் போக்குவரத்துகள் நிகழ்ந்தன. பாகிஸ்தான் திட்டத்தைப் பற்றி பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு உத்தியோக ரீதியில் முஸ்லிம் லீக் ஒன்றையும் சமர்ப்பிக்கவில்லை; எனவே, அதனைப்பற்றி பிரிட்டிஷ் அரசினரின் மனப்பான்மை என்ன என்று கேட்டல் அவசியம் இல்லை. இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டந்தஸ்தான சுயராச்சியத்தை நல்குவதே பிரிட்டிஷாரின் நோக்கம் என்று இராஜப் பிரதிநிதி சவர்க்காருக்கு அறிவித்து விட்டார். இந்நிலைமையில் ஹிந்து மகாசபை நேரடியான நடவடிக்கை எடுத்துக் கொள்ளத் தேவையில்லை என்று சவர்க்கார் டாக்டர் மூஞ்ஜி உட்படவுள்ள ஹிந்து மகாசபைத் தலைவர்கள் கருதுகிறார்கள்.

0 0 0

வங்காளத்தின் நிலைமை

முஸ்லிம் லீக்கின் காலைக் கட்டிப்பிடித்துக் கொண்டு உழலும் மிஸ்டர் பஸ்லுல் ஹக்கைப் பிரதம மந்திரியாகக் கொண்ட, வங்காள அரசியல் நிலைமை திண்டாட்டத்தில் இருக்கிறது. ஹக் மந்திரிசபை ஏற்பட்டபின், வங்காளத்தில் வகுப்புக் கலவரங்கள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. இப்போது டாக்காப் பகுதியில் நிகழும் வகுப்புக் கலகம், வங்காளத்தில் ஹக் தர்பாருக்கு உலைவைக்க ஏதுவாக இருக்கலாம். பட்சபாதமற்ற முறையில் நிருவாகத்தை நடாத்துதல் ஹக் போன்ற குறுகிய மனப்பான்மை கொண்டோரால் முடியாத காரியம். வங்காளத்தில் உள்ள சகல சமூகத்தினர்க்கும் பொதுவான தலைவராயிருக்க வேண்டிய அவர், கேவலம் வகுப்புவாதப் பித்துக் கொண்டு ஹிந்துக்களை வாயில் வந்தபடி எல்லாம் தூற்றியிருக்கிறார். அவரும் அவருடைய சகாக்கள் சிலரும் கக்கி வந்த விஷத்தின் பலனே இப்போது வகுப்புக் கலவரங்களாக மாறி, இந்தியதேசிய இயக்கத்தின் மூலாதாரஸ்தானமாய் விளங்கிய வங்காளத்துக்கு ஓர் பெரிய அபவாதத்தை உண்டாக்கியிருக்கிறது. மந்திரிமாரை நீக்கி அரசியல் நிருவாகம் முழுவதையும் தேசாதிபதியே ஏற்று நடாத்த வேண்டும் என்ற கிளர்ச்சி அங்கு இப்போது பெரிதாகியிருக்கிறது. தற்போது நிகழ்ந்துள்ள இக்கெருக்கடி சம்பந்தமாகத் தேசாதிபதி வங்கச் சட்டசபையின் கட்சித் தலைவர்களுடன் ஆலோசித்து வருகின்றார்.

0 0 0

கையை விரித்துவிட்டார்

இந்திய அரசியலில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தீர்ப்பதற்கு, இராஜப்பிரதிநிதியின் ஆலோசனைச்சபையை இந்தியர் மயமாக்க வேண்டும்; பொதுஜன ஆதரவைப் பெற்றுள்ள ஜனப்பிரதிநிதிகள் அச்சபையில் அங்கத்துவம் வகிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்; யுத்தம் முடிந்தும் குறிப்பிட்ட ஓர் காலத்துள் பாரதநாட்டுக்கும் சம அந்தஸ்தை அளிக்கப் பிரிட்டிஷ் அரசாங்கம் உடன்பட வேண்டும் என்று சேர் தேஜ்பகதூர்சப்ரு தலைமையில் கூடிய தலைவர்கள் மகாநாடு தீர்மானித்தது அல்லவா! பிரிட்டிஷார் தற்போதுள்ள தமது நிலையை உத்தேசித்தாவது மிகவும் குறைந்த இத்தக் கோரிக்கைகளுக்கு இணங்குவர் என எல்லாரும் எதிர்பார்த்தனர். ஆனால் சென்ற செவ்வாய்க்கிழமை (22-4-41) கூடிய பார்லிமென்றத்தில் இந்திய மந்திரி, தம் வழக்கமான வழவழாப் பிரசங்கம் ஒன்று செய்து எல்லாவற்றுக்கும் கையை விரித்துவிட்டார். யுத்த காலத்தில் ஒருவிதமான ஒழுங்கும் செய்யமுடியாது என்றார். இந்தியாவில் மிகவும் சக்தி வாய்ந்த முஸ்லிம் லீக்கும் காங்கிரசும் அபிப்பிராய பேதம் கொண்டிருக்கின்றன வென்றும், முஸ்லிம் லீக்கின் கோரிக்கைகள் அப்படியே நிராகரிக்கப்படத்தக்கனவல்ல என்றும் தம் பழைய பல்லவியை மிஸ்டர் அமெரி பாடினார். இந்தியாவுக்குச் சம அந்தஸ்து கொடுப்பதில் பிரிட்டிஷாருக்கு ஆட்சேபமேயில்லை, ஆனால் காங்கிரசும் முஸ்லிம் லீக்கும் ஒற்றுமைப்படாமையே அது தடைப்படுதற்குக் காரணம் என்றும் மிஸ்டர் அமெரி குறிப்பிட்டார். இந்தியாவைத் துண்டுபோடும் முஸ்லிம் லீக்கின் கோரிக்கை அவ்வளவு சிறந்ததல்ல என்றும் மிஸ்டர் அமெரி ஓர் புதுமொழி கூறினர், சுருங்கக் கூறுகின், மிஸ்டர் அமெரி புதிதாக ஒன்றையும் வெளியிடவில்லை, பழைய கதையையே புரட்டிப்புரட்டிச் சொன்னார். பிரிட்டிஷ் நல்லெண்ணத்தில் நம்பிக்கை கொண்டிருந்த இந்திய மிதவாதிகளுக்கு மிஸ்டர் அமெரியின் இப்பிரசங்கம் பிரிட்டிஷாரின் உண்மை மனநிலையைக் காட்டுவதாகும்.

பாடப்புத்தகக் கொம்மிஷன் விசாரணை

நேற்று ஆரம்பமாயிற்று

திரு. வீரக்கூன், திரு. வாட்ஸன் சாக்ஷியங்கள்

பாடசாலைகளுக்குப் பாடப் புத்தகங்களை நிர்ணயஞ் செய்வதில் லஞ்சம் உட்படப் பலவிதமான ஒழுங்கீனங்கள் காணப்படுவதாக முறைப்பாடு செய்யப்பட்டது பற்றி விசாரிப்பதற்காகத் தேசாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள பாடப் புத்தகக் கொம்மிஷனின் விசாரணை நேற்று ஆரம்பமாயிற்று.

நேற்றுக் காலையில் அரசாங்க சபைக் கொம்மிற்றி அறையில் இக் கொம்மிஷன் விசாரணை நடைபெறலாயிற்று. ஸேர். ஜெரார்ட் விஜயக்கூன் கொம்மிஷனின் தலைவராகவும், திரு. K. பாலசிங்கம், மிஸ்றர் H. K. டி. கிரெட்ஸர், திரு. A. K. J ஹெண்டேர்ஸன் (காரியதரிசி) ஆதியோர் அதன் மற்றைய அங்கத்தவர்களாகவுமிருந்தனர்.

கொம்மிஷன் முன் முதலாவது சாக்ஷியங் கூறியவர் உதவி வித்தியாகர்த்தர் திரு ஜே. சி. வீரக்கூன் ஆவர். இவரது சாக்ஷியம் பெரும்பாலும் அரசினர் சிங்களத் தமிழ்ப்பாடசாலைகளில் உபயோகிக்கப்படும் பாடப் புத்தகங்கள் சம்பந்தமாகவே இருந்தது. அவர் கூறியவற்றின் சாரம் வருமாறு:-

அரசினர் பாடசாலைகள் சம்பந்தமாகவே நான் பேச விரும்புகின்றேன். வித்தியாபகுதியால் அங்கீகரிக்கப்பட்ட பாடப்புத்தகங்களின் நாமாவலியை நாம் குறித்த பாடசாலைகளுக்குக் கொடுத்துள்ளோம். அவை பாடப்புத்தகக் கொம்மிற்றிகளின் ஆலோசனைப்படி வித்தியாகர்த்தரால் அங்கீகரிக்கப்பட்டவை. அந்த நாமாவலியிலிருந்தே அரசினர் பாடசாலையிற் படிப்பிக்க வேண்டிய பாடப் புத்தகங்கள் தெரியப்பட வேண்டும். மற்றது, ஒருபாடப்புத்தகம் 3 வருஷங்களுக்கு உபயோகிக்கப்பட்ட பின்னரே அப்புத்தகத்தை மாற்றி வேறு பாடப் புத்தகம் வைக்க வேண்டும் என்பதும் அரசினர் பாடசாலைகளுக்கு அறிவிக்கப்பட்டது.

வித்தியாதரிசிகளுக்குப்பாடப்புத்தக சம்பந்தமாக ஆலோசனை கூறும் அதிகார மிருப்பினும், வித்தியாதரிசியாகக் கடமையாற்றிய என்னுடைய அநுபவத்திலிருந்து வித்தியாதரிசிகள் தாமாகவே பாடப் புத்தகங்களை மாற்றி வைத்திருப்பதாகத் தெரியவில்லை. உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளில் பாடப்புத்தகங்களை மாற்றும் அதிகாரம் எமக்கு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை, நாம் ஆலோசனை மாத்திரம் கூறலாம். ஆயின் அரசினர் பாடசாலைகளே நாம் சொன்னபடி கேட்டு நடத்தல் வேண்டும். அப்பாடசாலைகளே நாம் சிபார்சு செய்யாத எந்தப் புத்தகத்தையும் உபயோகிக்க முடியாது. உதவி நன்கொடை பெறும் பாடசாலை நாம் சிபார்சு செய்யாத புத்தகங்களையும் உபயோகிக்கலாம். புத்தகங்களை அடிக்கடி மாற்றஞ் செய்வதால் பெற்றோர்களுக்கு ஏற்படும் கஷ்டங்களையும் நாம் சிந்திக்க வேண்டும். சில புத்தகங்கள் ஆசிரியரின் உபயோகத்துக்காகவே சிபார்சு செய்யப்பட்டிருக்கின்றன. வித்தியாபகுதியாரால் அங்கீகரிக்கப்படாத பாடப்புத்தகங்களை உபயோகிக்கும் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கும் வித்தியாபகுதியார் உதவி நன்கொடை கொடாமல் மறுத்து விடலாம். ஒரு வகுப்பிற் சித்தியெய்தாத மாணவன் மறுவருஷமும் அதே புத்தகத்தைத் திருப்பிப் படிக்க வேண்டி ஏற்படுவது நல்லதல்லவே என்றால் அஃது உண்மையே, என்னளவில் "(அஃதாவது என் சொந்த அபிப்பிராயத்தில்) அவ்வாறு ஒரே புத்தகத்தை மூன்று வருடங்களுக்கு வைத்தல் நல்லதல்ல வென்றுதான் நான் கருதுகிறேன்"

"25 சதத்"துக்காக ஒரு மாணவனின் அறிவைத் தியாகஞ் செய்யக் கூடாது. எந்த மாணவனும் ஒரு வகுப்பிற் சித்தியெய்தத் தவறி மறுவருஷமும் அவ்வகுப்பிற் படிக்கும்போது முதல் வருடத்திற் படித்த புத்தகத்தையே படிக்க வேண்டிய நிர்ப்பந்தமேற்படக் கூடாது" என்று திரு. K. பாலசிங்கம் குறிப்பிட்டார்.

அதன்பின் திரு. டப்ளியூ. ஆர். வாட்ஸன் சாக்ஷியங் கூறினார்.

அவர் ஆங்கில பாடப் புத்தகங்களைப் பற்றியும் அப்புத்தகங்களைச் சிபார்சு செய்யும் கொம்மிற்றியின் அங்கத்தவர்களைப் பற்றியும் கூறி, அக்கொம்மிற்றி பாடபுத்தகங்களை அங்கீகரிக்கும் முறையையும் பற்றி விளக்கினார். அவர் கூறியவற்றின் சாராம்சம் வருமாறு: ஆங்கிலப் புத்தகங்கள் சம்பந்தமாக வித்தியாபகுதியாரே எவ்வித அபிப்பிராயத்தையும் தெரிவித்து வருகின்றனர். ஆங்கில பாடப் புத்தகங்களை வெளியிடும் மாக்மில்லன்ஸ் அன் லோங்மன்ஸ் கம்பெனிகள் வித்தியா பிரச்னைகளையெல்லாம் நன்கு ஆராய்ந்து கற்ற எழுத்தாளர்களைக் கொண்டுள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட பாடப் புத்தகங்களிலிருந்தே தமது பாடப் புத்தகங்களைத் தெரிவு செய்யவில்லையென்று எந்தப் பிரதமாசிரியரையோ ஆசிரியரையோ நான் குறைகூறவில்லை. உதாரணமாக சென். தோமஸ் கல்லூரிப் பிரதமாசிரியர் சென். ஜோசெப்ஸ் கல்லூரிப் பிரதமாசிரியர் போன்றோர் தமது பாடப் புத்தகங்களைத் தாமே தெரிவுசெய்து கொள்ளக் கூடும். ஆயின், ஒரு பாடப் புத்தகம், ஒருவகுப்புக்குப் பொருத்தமற்றது அல்லது தகுதியற்றதென்று வித்தியாதரிசியொருவர் உண்மையாகவே காண்பாராயின், அவர் அதைப்பற்றி வித்தியாகர்த்தருக்கு முறைப்பாடு செய்யலாம். அது பாடப் புத்தகக் கொம்மிற்றியால் அங்கீகரிக்கப்பட்ட புத்தகமாயிருப்பினும் அது தகுதியற்றதென்று கண்டால் அவர் அவ்வாறு முறைப்பாடு செய்துகொள்ளலாம்."

ஏதாவது சில "சுயநல" நோக்கங்களோடு ஒரு வித்தியாதரிசி ஒரு பாடப் புத்தகத்தை வைக்கவேண்டுமென்று குறிப்பிடுதல் கூடாதா என்று கேட்கப்பட்டபோது, "மிகக் கடுமையான சட்டங்களுக் கிடையே ஒருவர் நினைத்தால் தகாதவகையில் ஒன்றைச் செய்துவிட்டுத் தப்பியும் விடக்கூடும். ஆனால், வித்தியாதரிசிகள் அப்படிச் செய்வார்களென்று நான் நினைக்கவில்லை" என்று திரு. வாட்ஸன் பதிலுரைத்தார். மேலும், ஏதாவதொரு புத்தகம் பொருத்தமற்றது என்று கண்டால் அதை ஒரு வித்தியாதரிசி வித்தியாகர்த்தருக்கும் பாடசாலை மனேஜருக்கும் தெரிவித்துக்கொள்வது சரியானதேயாகும் என்று திரு. வாட்ஸன் வாதித்தார்.

யாழ்ப்பாணச் சிறையில் கொண்டாட்டம்

இந்துக் கைதிகளுக்கு விருந்து

இம்மாதம் 13ந் திகதி யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலுள்ள இந்துக் கைதிகள் புதுவருஷத்தைக் கொண்டாடினர். சிறைச்சாலையிலுள்ள மண்டபம் ஒன்று மிக அழகாக அலங்கரிக்கப்பட்டு அங்கு ஒரு 'வேல்' அமைக்கப்பட்டது. பிற்பகல் 2-30 மணிக்குக் கொண்டாட்டம் ஆரம்பமாயிற்று. யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் பிரதிநிதிகள் கொண்டாட்டத்தை நடாத்தினர். பூஜை முடிந்ததும், கைதிகளுக்கு விபூதி, சந்தனம், மலர் முதலியவை வழங்கப்பட்டன. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிச் சங்கீத ஆசிரியர் திரு. A. இராஜூப்பிள்ளை அரைமணி நேரம்வரை தேவார பாராயணஞ் செய்தார். அராலியைச் சேர்ந்த மலாய்நாட்டுப் பென்ஷனர் திரு. V. கந்தையா "மக்கட்பிறவி" என்னும் பொருள்பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். இறுதியில் தேவாரபாராயணத்தோடு கூட்டம் பூர்த்தியாயிற்று. அதன்பின் அங்குள்ள கைதிகளுக்குச் சிற்றுண்டி முதலியவை பரிமாறப்பட்டன.

'தேசீயக் கல்வியை விருத்தி செய்க"

இலங்கையரல்லாதார் பிரச்சினை நிரந்தர வாசிகளுக்குப் பிரஜாவுரிமை

யாழ்ப்பாணத்தில் நீர்ப்பாய்ச்சல் வசதிகள் வாலிபர் மகாநாட்டில் தீர்மானங்கள்

யாழ்ப்பாணம் வாலிபர்மகாநாட்டு நிர்வாகசபையின் கூட்டம் சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை அத்வக்காத் திரு. M. பாலசுந்தரம் தலைமையில் 'கலாநிலைய' மண்டபத்திற் கூடியது. இம்மாதம் 25ம், 26ம் திகதிகளிற் பண்ணாகத்தில் நடைபெறவிருக்கும் மகாநாட்டு வருடாந்தக் கூட்டத்திற் கொண்டுவருவதற்காக நிர்வாகசபையில் தீர்மானிக்கப்பட்ட தீர்மானங்கள் சில பின்வருமாறு:-

அந்நியர் குடியேற்ற விஷயம்

'இலங்கையில் அந்நியர் குடியேற்றத்தை இனிமேல் அரசாங்கம் மிகவும் கண்டிப்பாகக் கட்டுப்படுத்த வேண்டுமென்று மகாநாடு அபிப்பிராயப்படுவதானாலும் ஏற்கெனவே இலங்கையிற் குடியேறி வசிக்கும் இலங்கையரல்லாதாருக்கு இந்நாட்டில் நிரந்தரமான நலவுரிமைகள் இருக்கும் பட்சத்தில் அவர்களுக்குப் பிரஜா உரிமையையும் அரசியல் உரிமைகளையும் பரிபூரணமாக அளிக்க வேண்டுமென்று மகாநாடு அபிப்பிராயப்படுகிறது.'

'தேசீயக் கல்வி முறை அவசியம்"

இப்பொழுது ஓர் அந்நிய பாஷையின் மூலம் போதிக்கப்பட்டுவரும் கல்வி நமது தேசத்தின் பழஞ் சிறப்புகளோடு சம்பந்தமில்லாமலும், இத் தேசமக்களின் கலாசாரத்திற்கும் பொருளாதார நலனுக்கும் பெரிதும் பாதகமாயும் இருப்பதால் தேச முழுவதுக்கும் பொதுவானதும் நமது பழைய சரித்திரப் பெருமைகளையும், இப்போதைய தேவைகளையும் அடிப்படையாகக் கொண்ட தேசிய நோக்கமுள்ளதுமான ஒரு கல்வி முறையைப் புகுத்தி, ஆரம்பப் பாடசாலை முதல் சர்வகலாசாலைப் படிப்பு வரையிலும் தாய்ப்பாஷையிலே கல்வி போதிக்க உடனே ஏற்பாடு செய்ய வேண்டுமென இந்த மகாநாடு தீர்மானிக்கின்றது.'

"அரசாங்கத்தார் தங்களுடைய உத்தியோக சம்பந்தமான காரியங்களுக்கும் இத்தேசத்தில் வழங்கப்படும் பாஷைகளையே உபயோகித்துக்கொள்ள வேண்டுமென மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.'

"மனித சமூகத்தில் சமத்துவக் கொள்கையை மேற்கொண்டு, ஜாதி மதத்தினாலும் செல்வ நிலைமையினாலும், உத்தியோக நிலைமையினாலும் சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்த வேண்டாமென இந்த மகாநாடு தேசமக்களைக் கேட்டுக்கொள்கின்றது. அத்தோடு தீண்டாமை ஒழிப்பு உணர்ச்சியை மக்களிடையே ஊட்டவேண்டுமென்றும் தீர்மானிக்கின்றது."

விளைபொருள் விற்பனை வசதி

'தேசமக்களிடையே வறுமை அதிகரித்துவருவதையும் விவசாயப் பொருள்கள் விற்பனையில் இடைத்தட்டுத் தொல்லைகளையும் உத்தேசித்து தரகர்கள் தலையீட்டை ஒழிப்பதற்கும், அநியாயமான வியாபாரப் போட்டியைத் தடுப்பதற்கும் அரசாங்கமே எல்லா விளைபொருள்களுக்கும் விற்பனை வசதியைச் செய்து கொடுத்து யாழ்ப்பாணத்தின் பொதுவான விவசாயநிலைமையை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யும்படி இந்த மகாநாடு விவசாய மந்திரியைக் கேட்டுக்கொள்ளுகின்றது.'

யாழ்ப்பாணத்தில் நீர்ப்பாய்ச்சும் வசதி

"யாழ்ப்பாணத்திற் போதிய நீர்ப்பாசன வசதிகள் இல்லாமற் குடியானவர்கள் மிகுந்த கஷ்டத்திற்குள்ளாகி வருவதோடு விளைவும் பிற்போக்கடைந்து வருவதால் ஆழமான பெரிய கிணறுகளை வெட்டி, யந்திரங்கள் மூலமோ அல்லது மின்சாரசக்தியின் மூலமோ தண்ணீர் இறைத்து இப்போதைய நீர்ப்பாசன முறையைச் சீர்திருத்த வேண்டுமென இந்த மகாநாடு விவசாய மந்திரியைக் கேட்டுக்கொள்ளுகின்றது.

கந்தானை வேலை நிறுத்தம்

நீக்கப்பட்டவர்கட்கு மீண்டும் வேலை

கந்தானையிலுள்ள சுதேசிக் கைத்தொழிற்சாலையில் தொழிலாளர் வேலைநிறுத்தம் முடிந்துவிட்டது.

வேலைநிறுத்தஞ் செய்த தொழிலாளர்களின் கோரிக்கைகளை அரசாங்கசபைப் பிரதிநிதி திரு. டி. பி. ஜயசூரிய, உதவித் தொழிற் கட்டுப்பாட்டதிகாரியிடமும், தொழிற்சாலை முதலாளிகளிடமும் தெரிவித்துக்கொண்டதன்பின், ஒரு சமரசமான முடிவு ஏற்பட்டது. வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்களை மீண்டும் சேர்த்துக்கொள்ளுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

சமரச முடிவு ஏற்பட்டதின்பின் திரு. எம். ஜி. மெண்டிஸ் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. அப்பொழுது தலைவர் இந்த விவகாரத்தில் திரு.ஜயசூரியா தலையிட்டுச் சமரசம் ஏற்படுத்தியதற்காக அவருக்கும், ஒழுங்கான முறையில் வேலைநிறுத்தஞ் செய்ததற்காக வேலைநிறுத்தக் காரர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

அச்சு ஒப்பந்தத்தில் சோவியத் சேர மறுப்பு

ஜெர்மனி இத்தலி ஜப்பான் ஆகிய மூன்று வல்லரசுகளின் ஒப்பந்தத்திற் சேரும்படி சென்ற நவம்பர் மாதத்தில் சோவியத் அரசாங்கம் அச்சு வல்லரசுகளால் அழைக்கப்பட்ட பொழுது அது மறுத்துவிட்டதென்று "பிராவ்டா" பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கட்டுரையொன்றிற் சொல்லப்படுகிறது.

சோவியத் அரசாங்கத்தின் அயல்நாட்டுக் கொள்கை பூரண சுயேச்சையானதென்றும் அது சோவியத் மக்கள், சோவியத் அரசாங்கம், சமாதானம் ஆகியவற்றின் நலவுரிமைகளால் நிர்ணயிக்கப்பட்டதென்று மேற்படி பத்திரிகை வற்புறுத்துகிறது.

விவாகம்

நமசிவாயம்பிள்ளை—மகேஸ்வரி

இம்மாதம் 29-ந் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 1 மணியளவில் வரும் சுபமுகூர்த்தத்தில், தமது மருகனும் கொழும்பு கம்பியில்லாத் தந்தி நிலையப் பரிசோதகராகக் கடமை பார்ப்பவருமாகிய திருவளர் செல்வன் A. நமசிவாயம்பிள்ளை அவர்களுக்கும், அரசாங்க வைத்திய உத்தியோகஸ்தராயிருந்து இளைப்பாறியிருக்கும் டக்டர் K. இராசா அவர்களின் புதல்வி திருவளர்செல்வி மகேஸ்வரிக்கும் மணமகளில்லத்தில் நடைபெறவிருக்கும் விவாகத்திற்குச் சமுகமளிக்கும் வண்ணம் தமது சுற்றமித்திராதியரை முதலியார் P. இராஜகோபால் அவர்கள் வேண்டிக்கொள்கின்றார்கள்.

வரவேற்புபசாரம் இம்மாதம் 29-ந் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் 8 மணி வரை மணமகளில்லத்திலும் 30-ந் திகதி புதன்கிழமை மாலை 5½ மணி தொடக்கம் 8½ மணி வரை மணமகனில்லத்திலும் நடைபெறும்.

ஆசனம் கம்பளம்

ஏப்ரல்மீ 18-ந் திகதி, 1941,
"இராஜவிலாஸ்"
ஐயனார் கோவிலடி,

வண்-மேற்கு
யாழ்ப்பாணம்

Mis 12, 24.4.41

வைப்பாட்டியால் வந்த வினை

பருத்தித்துறையில் நிகழ்ந்த சம்பவம்

சுப்பிறீம் கோட்டில் விசாரணை

ஐ-தி

பருத்துறையைச் சேர்ந்த இமையாணன் என்னுமிடத்தில் வசிக்கும் வேலன் ஆசையன், சின்னப்பொடியன் மாணிக்கன் ஆகியவர்களுள் முதலாம் எதிரி சென்ற 1940 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 5 திகதி காலை அவ்வூர்க் கதிரன் வயிரவனுக்கு ஒரு கத்தியாற் குத்திக் கொலை செய்ய எத்தனித்ததாயும் ஆழ்வான் கிட்டினனுக்குக் குத்திச் 'சாதாரண காயம் வருவித்ததாயும்' இரண்டாம் எதிரி முதலாமெதிரிக்கு உதவி புரிந்ததாயும் குற்றஞ் சாட்டிய வழக்கு யாழ்ப்பாணம் சுப்பிறீம் கோட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. ஈஸ்டர் விடுதலைக்குப் பின்னர் நீதியாசர் திரு நிகில் விசாரணையை நடத்தி வருகிறார்.

மேற்படி வழக்கின் சாராம்சமாவது:-

காயக்காரனாகிய கதிரன் வயிரவன் முறைப்படி குட்டி என்பவளை விவாகஞ் செய்திருந்தான். பின்னர்ச் சின்னாச்சி என்பவளையும் வைப்பாட்டியாக வைத்திருந்தான். இச்சம்பவத்திற்கு முன்னர், அதாவது ஜூலாய் மாதம் 15 ந் திகதி வைப்பாட்டியாகிய சின்னாச்சியும் முதலாம் எதிரியின் தாயாரும் ஏதோ வாக்குவாதப் பட்டனர். அந்த கோபத்தில் முதலாம் எதிரி சின்னாச்சிக்கு அடித்தான். இச்சம்பவம் கதிரன் வயிரவனுக்கு அறிவிக்கப்பட்டது. வயிரவன் அவ்விடத்திற்கு வந்து சின்னாச்சிக்கு அடித்தவர்களை வைதான். பின்னர் அவ்வூர்க் கிராமக் கோட்டில் ஒரு வழக்குத் தொடரப்பட்டது. இவ்வழக்கு ஆகஸ்ட் மாதம் 5-ந் திகதிக்குத் தவணையிடப்பட்டிருந்தது. வயிரவனும் கிட்டினனுமாகக் கிராமக் கோட்டிற்குப் போகையில், எதிரிகள் இருவரும் இவர்களை வழியிற் சந்தித்து முதலாம் எதிரி வயிரவனிடம் 'நீ உன் வைப்பாட்டிக்கு அடித்ததைப் பற்றி ஏதோ வைதாயாம்' என்று கேட்டான். இப்படிக் கேட்டபோது வயிரவன் தான் வைததாக ஒப்புக் கொண்டான். இதற்கிடையில் இரண்டாமெதிரி மாணிக்கன் காயக்காரனாகிய வயிரவனின் இருகைகளையும் பிடிக்க முதலாமெதிரி கத்தியாற் குத்தினான். அப்போது கிட்டினன் ஏன் அப்படிக் குத்துகிறாயென்று குறுக்கிட்டுக் கேட்டபோது முதலாம் எதிரி அவனுக்குங் குத்தினான். பின்னர் எதிரிகள் அவ்விடத்தை விட்டு ஓடி விட்டனர்.

இரண்டாமெதிரி கிட்டினனுக்கும் குத்தடாவென்று முதலாமெதிரியிடம் கூறினபோதுதான் முதலாமெதிரி குத்தினான். வயிரவன் அறிவு மயங்கி நிலையத்தில் இருந்துவிட்டான். அவ்வழியாற் சென்ற முனசிங்க வென்னும் பொலிஸ்காரனுக்கு இச்சம்பவம் அறிவிக்கப்பட்டது. முனசிங்க காயக்காரர்களை ஆஸ்பத்திரியில்விட்டார். நீதிபதிகாயக்காரன் வயிரவனின் வாய்முறைப்பாட்டைப் பதிவுசெய்தார்.

சில சாக்ஷிகளை விசாரணை செய்த பின்னர் முதலாம் எதிரி தான் கைபிழைபாடாய்க் கொலை செய்ய எத்தனித்த குற்றச்சாட்டிற்குக் குற்றவாளியென்பதை ஒத்துக்கொள்வதாகக் கூறவே, நீதியாசர் ஜூரிக் கனவான்களது சம்மதத்தைக் கேட்டார். அவர்கள் தாங்களும் அதனை ஒத்துக்கொள்வதாக அபிப்பிராயம் தெரிவித்து மேலும் இரண்டாமெதிரி மீது சாட்டப்பட்ட குற்றத்திற்கு அவனை விடுதலை செய்யலாமென்றும் அபிப்பிராயம் கூறினர். நீதியாசர் இரண்டாமெதிரியை விடுதலை செய்து முதலாமெதிரி முன்னர் ஒருவகையான குற்றமுஞ் செய்யாததாலும் நன்னடத்தையுடையவனாயிருந்ததாலும் வயதிற் குறைந்தவனாயிருந்ததாலும் மறியற்றண்டனை விதியாது நன்னடத்தை தண்டனை விதிக்க உத்தேசித்திருப்பதாகக் கூறி எதிரியை நன்னடத்தைப்பாடசாலை ஒன்றுக்கு 3 வருட காலத்திற்கு அனுப்பி வைப்பதற்குப் பாடசாலை அதிகாரிகள் எதிரியை எடுத்துக்கொள்வார்களோ வென்பதை விசாரித்துத் தீர்ப்புக் கூறுவதாகக் கூறி எதிரியை மூன்று வாரம் வரையிலும் விளக்கமறியலில் இருக்கும்படி கூறினார். இந்த மூன்று வருடகாலத்திலும் ஏதும் ஒரு கைத்தொழிலைப் பழகித் திரும்பி வந்ததும் நேர்மையான சீவியத்தை நடத்தும்படியும் கூறி முடித்தார்.

எங்கள் சங்கீதமும் சில அபிப்பிராயங்களும்

எங்களுக்குக் கர்நாடக சங்கீதம் மிகவும் புதியது. அது தென்னிந்தியர்களின் ஜீவன். அவர்களே அக்கலையில் ஆட்சியுள்ளவர்கள். அவர்களிடமே கர்நாடக சங்கீதத்தின் ஸ்வரூபத்தையும் பழமையையும் இன்றும் காணக்கூடியதாக இருக்கிறது. நாளைக்கு ஒருவேளை அக்கலையின் முழுரூபமும் யாழ்ப்பாணத்திலே தோன்றிப் பிரகாசிக்கலாம். அதற்கே நாமும் தவஞ் செய்கின்றோம். ஆனால் சங்கீதக்கலைக்கு ஒரு மூலை கூடத் தோற்றுவதற்கு முன்பு, அம்மூலை முளைப்பிடத்தையே நசுக்கி விடுவதற்கு நம்மிலநேகர் முயலுகின்றோம். அளவில்லாத லக்ஷணங்களும் அறைகளுங் கொண்ட அந்தக் கலையைப் பற்றி ஒரு முடிபுக்கு வந்துவிட நம்மிலெத்தனை பேருக்கு ஆற்றலிருக்கிறது. இதற்குச் சூன்யமே அருக்கமான விடையென்பதை நாமே சொல்லிவிடலாம்.

இவ்விதமான சங்கீத மெனனும் தனிப்பெருங் கலையை யாழ்ப்பாணத்துப் பிள்ளைகளுக்குப் புகட்டிவிட வேண்டுமென்று வெகுகாலமாகவே பலரும் பிரயாசைப் படுகிறார்கள். இதற்காகவே பல சங்கங்களும் தோற்றின. இனியும் தோற்றலாம். இப்படியே தோற்றின வட இலங்கைச் சங்கீத சபை வருடா வருடம் ஒரு கோடைகாலச் சங்கீத வகுப்பை நடத்தி வந்தது. பிரம்மஸ்ரீ சபேசையர், ஸ்ரீமான் பொன்னையாபிள்ளை, பிரம்மஸ்ரீ மருங்காபுரி கோபாலகிருஷ்ணையா முதலிய பிரபல சங்கீதவித்வான்களை இச்சபை காலத்துக்குக் காலம் அழைத்தது. இப்படியான வித்வான்கள் வந்த போதிலும் ஒரு மாதத்துக்குள்ளே சங்கீதத்தில எதைத்தான் கற்று மாணவர்கள் தேறினார்கள் என்பதை நாமறியோம். பாடத்திட்டம் வகுத்து, வாசிப்பு, கணிதம்முதலிய பாடங்கள் போலச் சங்கீதமும் படிப்பிக்கலா மென்று கருதுவதே சங்கீதக்கலையின் பெருமைக்கு இழுக்கை உண்டுபண்ணுவதாய் முடியும். இப்படியே நாம மேலே குறிப்பிட்ட வித்வான்களும் நேருக்கு நேராகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே குருபரம்பரை வழியாக வாழ்க்கையின் பெரும் பாகத்தைச் செலவிட்டுக் கற்கவேண்டிய கலையை நாமிப்படிச்செய்து பரிகசிப்பதாகாது. எனவே உண்மையான கலையின் ஜீவனைக் காணுவதற்காகப் படிக்கும் எந்தப் பிள்ளைக்கும் இவ்வித வகுப்புக்களாலே பிரயோசனமில்லை. 'எனக்கும சங்கீதம்தெரியும்' என்று சொல்லுவதற்கு மட்டும் ஒரு பத்திரம் கொடுத்துவிடுகிறார்கள்.

இந்தச் சங்கீத வகுப்புக்கு ஆசிரியர்களைத் தெரிவது சம்பந்தமான விஷயங்கள் பத்திரிகைகளில் அடிபடுகின்றன. வாஸ்தவத்தில் ஜீபம் செய்தது பிழையாக இருக்கலாம். ஆனால், சங்கீத பாடம் கற்பிப்பதற்கு, அக்கலையோடு பிறந்து வளர்ந்த இந்தியர்களே வாய்ப்பானவர்கள் என்பது எமது அபிப்பிராயமாகும். அதற்காக உள்ளூர் வாசிகளான ஞானஸ்தர்களையும தள்ளிவிட வேண்டுமென்பது கருத்தல்ல. சமீப வரில், அண்ணாமலைக் கலாசாலையில் தேறிச் சங்கீதபூஷணப் பட்டம் பெற்றவர்களும் சிலர் இருக்கிறார்கள் தான். அந்தப் பட்டத்தை மட்டுங் கொண்டு அவர்கள் சங்கீதக் கலையைப் புகட்டவல்ல தகைமையுடையவர்கள் என்று ஒப்புக்கொள்ளமுடியாது. அண்ணாமலைக் காலேஜ் தொடங்கிய இத்தனை காலத்தன்னும் எத்தனையோ சங்கீத பூஷணங்கள் வெளியே வந்து விட்டார்கள். இன்றைய சங்கீத உலகில் அவர்கள் எத்தனை பேர் பிரகாசிக்கிறார்கள். பெரிய சபைகளிலே குட்டிக் கச்சேரிகளுக்கு மட்டும் இடம் பெறும் தகைமைக்கு வந்த S. V. பார்த்தசாரதி போன்ற மிகவும் சிலரான சங்கீத பூஷணங்களும் காலேஜ் படிப்புக்கு முன்னும் பின்னும் பிரபல வித்வான்களிடம் சிஷ்யர்களாக இருந்திருக்கிறார்கள். இந்தச் சங்கீத பூஷணப் பட்டங் கொடுப்பவர்களும் இப்படிப் பட்டமில்லாத வெறும் மனிதர்களோ, இன்றைக் காலேஜ வாசனை படாதவர்களே சங்கீத உலகத்திலே பிரகாசிக்கின்றவர்களிலே தொண்ணூற்றொன்பது விதமானவர்கள். ஆதலின் பட்ட மொன்றை மட்டும் வைத்துக் கொண்டு அந்தப் பட்டதாரிகள் தகுந்தவர்களென்று நாம சொல்ல முடியாது. இதனால் அவர்கள் தகுதியற்றவர்கள் தான் என்பது எமது எண்ணமல்ல. ஆயின் அவர்கள் பொது மேடைகளிலே தாம் பெற்ற வித்தையின் நுண்ணிய புலமைகளைக் காட்டி மக்களை வசீகரித்துக் கொண்டால் உலகம் அவரைத் தானாகவே விரும்பி வரும். தேனிருக்கிற இடத்தைத் தேடி வண்டுகள் தாமாகவே செல்லவில்லையா?

இனி, கலைச் செல்வத்தைப் பெருக்கச் செய்யும் முயற்சிகள் வேறு; உள்நாட்டவரை ஆதரிப்பது வேறு. ஆனால் உள்நாட்டவரை ஆதரிக்க வேண்டுமென்பது அழியாத உண்மை. அதற்கு வேறு வேறு வழிகளை நாம் கண்டு பிடிக்க வேண்டும். நல்லாசிரியரிருக்க, உள்நாட்டவரென்று தகுதியற்றவரிடம் 'கெட்டுப் போ' என என்பிள்ளையை விட்டுவிட முடியுமா? இதனுல் உள்நாட்டவர்களென்றால் தகுதியற்றவர்கள் என்பது கருத்தல்ல.

இந்தியாவிலிருந்து அநேகர் சங்கீதம் சொல்லிக் கொடுத்து இங்கே பிழைக்கலாமென்று வந்திருக்கிறார்களென்பது உண்மையே. 'கொல்லன் தெருவிலே ஊசிவிற்க யாரும் போகார். அங்கே ஊசிவிலை போகாது. அந்த ஊசியில்லாத இடத்திலே தான் அதை விற்கப் போவார்கள். அப்படியே அநேகர் வந்தார்களென்றால் அது மானக்கேடா? இப்படி வந்தவர்களிலும் சிலர் தகுதியற்றவர்கள் இருக்கலாம். அதற்காக எல்லோரும் அப்படி யென்று கருதலாமா?

தனிப்பட்ட கோபங்களை வைத்துக் கொண்டு பத்திரிகைகளின் பெருமைக்கும் கேடு செய்து யாழ்ப்பாணத்துக்கும் அவமரியாதையை வாங்கி வைக்கக் கூடாது. எங்களுடைய பெருமையையும் மானத்தையும் நாங்கள் தானே காப்பாற்ற வேண்டும்?

ஒரு அபிமானி.

லண்டன் சேம்பர் வர்த்தகப் பரீக்ஷை

பின்போடப்பட்டது

இம்மாதம் 28ந் திகதி ஆரம்பிப்பதாகவிருந்த லண்டன் சேம்பர் வர்த்தகப் பிரிவுப் பரீக்ஷைகளைப் பின்போடவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டதாக வித்தியாகர்த்தர் அறிவித்திருக்கிறார். பரீக்ஷைகளுக்குரிய வினுப்பத்திரங்கள் இன்னும் வந்து சேராததினுலேயே பரீக்ஷை பின்போடப் பட்டிருக்கின்றது. புதிதாகப் பரீக்ஷைத் திகதி தீர்மானிக்கப்பட்டதும் பரீக்ஷைக்குச் சேரும் மாணவர்களுக்குக் குறைந்த பட்சம் ஒருவாரத்திற்கு முன்னதாகத் தகவல் அறிவிக்கப்படும்.

தி மலாயன்
டிரேடிங் கொம்பனி
(சிங்கப்பூர்க் கொம்பனி)
இரும்பு, பித்தளைச்சாமான்கள் சிமேந்து வகைகள்
விற்பனவு செய்வோர்
பெரியகடை, யாழ்ப்பாணம்
"புரோப்ரைட்டர்"
K. A. இரத்தினசிங்கம்
Y. 50,—3-4-40 3-3-41.

பத்திரக்கிரயம்

வருஷம் ஒன்றுக்கு யாழ்ப்பாணப்பட்டணத்தின் எல்லைக்குள்

தமிழ் ரூபா	5-00	இங்கிலீசும் தமிழும்	9-00
இலங்கை இந்தியா	8-00	இங்கிலீசும் தமிழும்	12-00
தொலைப்பகுதி	9-00	இங்கிலீசும் தமிழும்	13-00

தனிப்பிரதி சதம் 5
முற்பணமாக
அனுப்பப்படல் வேண்டும்

விளம்பர விகிதம்

முதன்முறைக்கு

நிரலைக்கு ரூபா	10.00	அரைக்கலம் ரூபா	5.00
கால்கலம் ரூபா	4.00	ஒரு அங்குலம் ரூபா	1.00

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி

[illegible]

வியாபாரத்திற் கழகு
விளம்பரஞ் செய்தல்
அதற்குகந்தது
இந்துசாதனம்

திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

மீ. 396

வெள்ளி ஏப்ரல் 25

முதல் ஒலிபரப்பு

காலை 7-30 கீதாரம்பம் (இசைத்தட்டு) 7-45 தமிழில் செய்திகள் 7-55 ஹிந்துஸ்தானி மெட்டுகள் (இசைத்தட்டு) 8-20 குரான் வாசகம் 8-30 கவ்வாலிகள் 8-50 ஆங்கிலத்தில் செய்திகள் 9-00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1-00 கதம்பம் (இசைத்தட்டு) 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 மைலம் பி. வஜ்ரவேலு முதலியார் பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 கோடைக்கல்வி 2-30 ஒலிபரப்பு முடிவு.

மூன்றாவது ஒலிபரப்பு

மாலை 5-00 வாத்திய சங்கீதம் 5-15 திருவீழிமிழலை எஸ். சுப்பிரமணியபிள்ளை சகோதரர்கள் நாகஸ்வரம் 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 எஸ். வி. சுப்பையா பாகவதர் (இசைத்தட்டு) 6-15 இசைப்பயிற்சி 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 எங்கள் தபால்பெட்டி 7-15 கோஷ்டிகானம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-50 திருவீழிமிழலை எஸ். சுப்ரமணிய பிள்ளை சகோதரர்கள் நாகஸ்வரம் 8-30 உலக விவகாரங்கள் 8-45 மைலம் பி. வஜ்ரவேலு முதலியார் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 10-00 ஒலிபரப்பு முடிவு.

சனி ஏப்ரல் 26

முதலாவது ஒலிபரப்பு

காலை 7-30 கீதாரம்பம் 7-45 தமிழில் செய்திகள் 7-55 எம். என். நடராஜ பிள்ளை புல்லாங்குழல் 8-20 தேவார விளக்கம் 8-30 பஜனை 8-50 ஆங்கிலத்தில் செய்திகள் 9-00 ஒலிபரப்பு முடிவு

இரண்டாவது ஒலிபரப்பு

1-00 உங்களுக்குப் பிடித்தவை (இசைத்தட்டு) 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 எச். எஸ். கிருஷ்ணராவ் பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 வாத்தியங்கள் (இசைத்தட்டு) 2-30 ஒலிபரப்பு முடிவு.

மூன்றாவது ஒலிபரப்பு

மாலை 5-00 மதராஸிலுள்ளபடி (கல்யாண வாத்திய கோஷ்டி) 5-45 டாக்கி மெட்டுகள் (இசைத்தட்டு) 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 எச். எஸ். கிருஷ்ணராவ் பாட்டு 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 செய்திச் சுருள் 7-15 வாழ்க்கைப் பலகணி 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் ரேடியோக் கச்சேரி 7-50 காரைக்குடி சாம்பசிவ ஐயர் வீணை காரைக்குடி முத்தையர் மிருதங்கம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 10.00 ஒலிபரப்பு முடிவு.

ஞாயிறு ஏப்ரல் 27

முதல் ஒலிபரப்பு

காலை 7-30 கீதாரம்பம் 7-45 தமிழில் செய்திகள் 7-55 தேவாராதனை (அதான்) 8-25 எம். டி. பார்த்தசாரதி, டி. எஸ். பகவதி 8-50 ஆங்கிலத்தில் செய்திகள் 9-00 ஒலிமலர் 10-00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1-00 திரைகானம் (இசைத்தட்டு) 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 ஸ்ரீமதி ஜி. சுப்புலக்ஷ்மிபாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 இசைத்தட்டு சங்கீதம் 2-30 ஒலிபரப்பு முடிவு.

மூன்றாவது ஒலிபரப்பு

மாலை 5-00 வாத்திய சங்கீதம் 5-15 வி. துரைசாமி ஐயங்கார் வீணை 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 விருப்பம் (இசைத்தட்டு) 6-15 இசைப்பயிற்சி 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 சட்டச் சுருக்கம் 7-15 இடைவேளை (இசைத்தட்டு) 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-50 வி. துரைசாமி ஐயங்கார் வீணை 8-30 ஸ்ரீமதி ஜி. சுப்புலக்ஷ்மி பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 10-00 ஒலிபரப்பு முடிவு.

திங்கள் ஏப்ரல் 28

முதல் ஒலிபரப்பு

காலை 7-30 கீதாரம்பம் 7.45 தமிழில் செய்திகள் 7-55 நாகஸ்வரம் (இசைத்தட்டு) 8-20 டி. கே. பாலகிருஷ்ண ஐயங்கார் பாட்டு 8-50 ஆங்கிலத்தில் செய்திகள் 9.00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1-00 பிற்பகல் முன்னிசை (இசைத்தட்டு) 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 டி. கே. பாலகிருஷ்ண ஐயங்கார் பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2.05 கோடைக்கல்வி 2-30 ஒலிபரப்பு முடிவு

மூன்றாவது ஒலிபரப்பு

மாலை 5-00 வாத்திய சங்கீதம் 5–15 ஸ்ரீமதி கே. என். செல்லப்பாபாய் பாட்டு 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 திருப்புகழ் மணி (இசைத்தட்டு) 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 கட்டையும் கல்வியும் 7-15 தத்தி வாத்தியங்கள் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-50 மதராஸிலுள்ளபடி (த்வாரம் வேங்கடசாமி நாயுடு வயலின் 9-00 இதுவே நேரம் 9.15 இடைவேளை (இசைத்தட்டு) 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 10-00 ஒலிபரப்பு முடிவு.

இருமல், இளைப்பு
சுகமானவர்
மதிப்புரை

மரைக்கயர் டிரேப்பரி ஸ்டோர்
112, 2-ம் குறுக்குத்தெரு,
கொழும்பு.

"ஆஸ்துமா" என்னும் இருமல், இளைப்பு, சுவாச காசரோகத்தால் நான் இரண்டு வருஷ காலம் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன். தண்டபாணி வைத்திய சாலையில் சென்ற 1938 செப்டம்பர் மாதத்தில் தாளக பஸ்பமும் சித்திர மூலச் சூரணமும் ரூபா 12 சதம் 50 க்கு வாங்கி 25 நாள் சாப்பிட்டேன். நோயின் கஷ்டங்கள் நீங்கிச் சுகமடைந்தேன். பின்பு இதுவரை 2 வருடங்களாகியும் எனக்கு நோய் திரும்ப வரவில்லை, திடகாத்திரமாக இருக்கிறேன். என்னைப் பார்த்துவிட்டுச் சுமார் 100 பேர்கள்வரை தங்களிடம் மருந்து சாப்பிட்டுச் சுகமடைந்திருக்கிறார்கள். தங்களுக்கு என்றும் மறவாத நன்றி செலுத்துகிறேன். 19.10.40
(ஒப்பம்) E. A. M. S. மரைக்காயர்.

ஸ்ரீ M. S. மரைக்காயர்.

இருமல், இளைப்பு, காசம், க்ஷயம், பீனிசம், தமேன் ரோய்களுக்கு
25 நாள் தாளக பஸ்பம் } ரூ. 7-50
,, நாள் மூலச் சூரணம் }
ரோய் விபரம் எழுதவும் கேட்லாக் இனம்.

தண்டபாணி வைத்தியசாலை,
96 செட்டியார்தெரு, கொழும்பு

Mis 204 5-3-41 4-6-41

சி. எம். சாமி
மன்மதக்
குளிகை

மிகுந்த
பலத்தையும்
ரத்த
விருத்தியையும்
உண்டாக்கும்

அநேக பரிசுகள் பெற்று, உலகெங்கும் புகழப்பட்டது;
இதற்கு நிகரான ஔடதம் வேறில்லை
ஒரேகுளிகையில் பரீட்சிக்கலாம்.

இழந்த சக்தியும் பலமும் திரும்ப வரும். நல்ல ஜீரணம், ரத்த விருத்தி, சரீரக்கட்டு, தேகபுஷ்டி, வாலிபசக்தி, இவற்றைத்தரவல்லது. எவ்வித பலஹீனம் இடுப்புவலி, உஷ்ணரோகங்கள் நீங்கும். ஒரு முறை பரீட்சித்தவர்களுக்கு இதன் அருங்குணம் விளங்கும். கேட்லாக்கிற்கு எழுதுங்கள்.

அர்டிவகாட்டார் முன்பண மனுப்ப வேண்டும்

60 குளிகை ரூபா 5 20 குளிகை ரூபா 2

தலைமை ஆபீஸ்:-
மலையப்பசாமி வைத்தியசாலை பழனி S I

கிளை ஆபீஸ்:-
1 மலையப்பசாமி வைத்தியசாலை சிந்தாதிரிப்பேட்டை மதராஸ்
2 மலையப்பசாமி வைத்தியசாலை 195 செட்டியார்தெரு கொழும்பு
3 மலையப்பசாமி வைத்தியசாலை வண்ணார்பண்ணை கதிரேசன் கோவிலடி யாழ்ப்பாணம்
Y221 31-3-41 30-3.42

சாஸ்திரமுறையாகக்
கண் பரிசோதனைசெய்து அதற்கேற்ற
கண்ணாடிகள் கொடுக்கப்படும்

வீனஸ் ஒப்ரிக்கல் கொம்பனி
28, பெரியதெரு யாழ்ப்பாணம்
Y 19 2-5-40—1-5-41

குயீன்பிரண்ட் (அரசி அடையாள) ஓடுகள்
குறைந்த விலை நிறைந்த குணம்
எங்கும் பெயர்பெற்ற, உறுதிவாய்ந்த
ஊறுத, நல்ல சத்தமுள்ள
யாவரும் விரும்பும் அழகிய ஓடுகள்.
இ. சுந்தரமூர்த்தி, (*Sole Agent*)
பெரியகடை, யாழ்ப்பாணம்.
c/o S. Veeragathipillai & Sons.
(Y. 89. B 12-8-39—11-8-40.)

வெளிவந்துவிட்டது!
புதிய வெளியீடுகள்
சிவிக்ஸ் (Civics) எனப்படும்
குடி இயல் நூல்
6-ம் வகுப்புக்குரிய முதற்புத்தகம் விலை சதம் 50
7-ம் வகுப்புக்குரிய இரண்டாம் புத்தகம் விலைசதம் 50
யாழ்ப்பாணம்
சைவபரிபாலன சபைப்
பிரசுரமாக அச்சிட்டு வெளிவந்துவிட்டது
மானேஜர்,
சைவப்பிரகாச யந்திரசாலை,
யாழ்ப்பாணம்.

சலவைசெய்த மல்லுகள்
மிகச்சிறந்த தரமுடையது
50" அகலமுள்ளது யார் ஒன்று 32 சதம் அல்லது 20 யார்கொண்ட துண்டு ஒன்று ரூ. 5-75
51" அகலமுள்ளது யார் ஒன்று 35 சதம் அல்லது 20 யார்கொண்ட துண்டு ஒன்று ரூ. 6/-
51" அகலமுள்ளது யார் ஒன்று 50 சதம் அல்லது 20 யார் கொண்ட துண்டு ஒன்று ரூ. 9/-
சில்லறை டிப்போ
பெரியகடை, யாழ்ப்பாணம்.
வெள்ளவத்தை ஸ்பின்னிங் அன்ட் வீவிங் மில்ஸ்.
சொந்தக்காரர்கள்: தி புறவிடேன்ற் இன்வெஸ்மென்ற் கம்பெனி லிமிற்றெட்.
(இந்தியாவில் ஸ்தாபிதமானது)
Mis 127.19-12.40 அங்கத்தவரின்பொறுப்பு வரையறுக்கப்பட்டது.

திருநெல்வேலி ஒற்றுமை நிதி (வரை ளது)
அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா 500,000.
ஒன்று 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா 25ம் ஆதாயமும் பெறலாம்
வங்கித்தொழிலும் வியாபாரமும்
இலாபகரமாய் நடக்கின்றன.
தேசியகருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெறமுடியும்.
இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.
உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும்
நிபந்தமாயும், சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும்
பணம் எற்றுக்கொள்வோம்.
பங்குகளுக்கு முந்துங்கள்!
வ. சோமசுந்தரம்,
(வி) காரியாதிகாரி
(Y. 89. C 1-11-39 to 31-10-40)

S. S. C. பரீக்ஷை இலக்கியம் (1941)
பாரதம்-கிருஷ்ணன்றூது சருக்கம்
மூலமும் உரையும்
பல வருடங்கள் J. S. C.; S. S. C. பரீட்சை இலக்கியங்களுக்கு விசேடமாகிய உரைநூல்கள் இயற்றி வெளியிட்டவரும், பண்டித, பாலபண்டித; பரீட்சைக்ஷ வகுப்புக்களுக்குப் போதித்த அநுபவம் வாய்ந்த இயற்றமிழ்ப் போதகாசிரியரும், வண்ணார்பண்ணை-நாவலர் வித்தியாசாலைத் தலைமையாசிரியருமாகிய திரு. வித்துவான், ந. சுப்பையாபிள்ளை அவர்கள் மேற்படி பரீட்சைக்ஷக்காகிய முறையில் இயற்றிய விசேட விரிவுரையுடன் அச்சிடப் பெற்றுள்ளது.
பிரதி எம்மிடத்திலும் பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.
பிரதி யொன்றன் விலை ரூபா 1 சதம் 10
தொகையாக வாங்கும் ஆசிரியர்களுக்கும் வியாபாரிகளுக்கும் தக்க கழிவு கொடுக்கப்படும்
இந்துசாதனம் } 20-8-40 }
மனேஜர்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday 24th April, 1941.